Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில்
நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப்
பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10335)

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-14 | 30-09-2004 | வியாழக்கிழமை | ஓசை -225

## நோர்வேயின் அனுசரணைக்கெதிராக ஐந்து மில். கையெழுத்து வேட்டை

### ஜாதிக ஹெல உறுமய நடவடிக்கை

**சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் அனுசரணைக்கெதிராக ஐந்து மில்லியன் கையெழுத்துக்கள் திரட்டும் நடவடிக்கையில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினர் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் இந்த நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயக்கட்சி அங்கத்தவர்கள் ஒழுங்கு செய்த கூட்டத்தில் ஏராளமான இனவாதப் போக்குடைய பிரமுகர்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.**

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கண்டி மத்திய சந்தைப் பகுதியில் இடம்பெற்ற இப்பிரச் சாரக் கூட்டத்தில், சிறிலங்காவின் இனப்பிரச்சினையில் தலையிடுவதை நோர்வே முற்றாகத் தவிர்த்துக் கொண்டு, சிறிலங்காவை விட்டு வெளியேற வேண்டும் என்று கோரியும், சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான அனுசரணையாளராக நோர்வே செயற்படுவதை

(12ஆம் பக்கம் பார்க்க)

### கப்பலில் வெடிவிபத்து

சிறிலாங்காக் கடற்பரப்பில் நேற்றுக் காலை கப்பல் ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்குத் தென்பகுதியில் 400 கடல் மைல்களுக்கு அப்பால் பயணித்துக் கொண்டிருந்த வெளி நாட்டுக் கப்பல் ஒன்றே வெடி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன காரணமாக இதில் பயணித்த நால்வர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்திருக்கின்றனர். சிங்கப்பூரில் இருந்து சுயஸ்கால்வாயினூடாகச் செல்வதற்கானஹொங்கொங்கில் பதிவு செய்யப்பட்ட கப்பலே இது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கப்பல் வெடி விபத்தில் பலியான நான்கு பேரின் சடலங்களையும் தாம் கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளதாக சிறிலங்காக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர் அந்தச்சடலங்கள் பொலிசாரின் சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

### இளைஞர்மீது துப்பாக்கிச்சூடு

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கிரானில் 19 வயது இளைஞரொருவர் நேற்று முன்தினமிரவு இனந் தெரியாத நபரொருவரினால் சுடப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டுள்ளார்.

மஞ்சந்தொடுவாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விவேகானந்த ராஜா என்ற இந்த இளைஞர் அவரது காதலியின் வீட்டில் தங்கியிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வயிற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர், தனக்கும் எந்தவொரு ஆயுத அமைப்பிற்கும் தொடர்புகள் இல்லை என்று பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வாழைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோகம் செய்து பிடித்த இளைஞரை மனிதஉரிமைக்குழு அதிகாரி பார்வையிட்டார்

(வடமராட்சி)

பொலிசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட இளைஞன் இரத்தின சிங்கம் சந்திரகுமார் (வயது-23) என்பவரை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் யாழ். சிறைச்சாலை யில் சந்தித்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர். நேற்றுக் காலை யாழ். சிறைச்சாலைக்கு நேரில் விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலக இணைப் பதிகாரி ஆர்.பி. றுவன் சந்திரசேகர மற்றும் விசாரணை அதிகாரி எம். பெரோஸ் சித்திரவதைக்களிற்குள்ளான தாகக் கூறப்படுவது குறித்த இளைஞனின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்திருந்தனர். அத்துடன் குடும்பத்தவர்களால் கையளிக்கப்பட்ட உடுபுடவைகளையும் கையளித்திருந்தனர்.

இதனிடையே கடந்த திங்கட் கிழமை யாழ். பொலிஸ் நிலையத்தினில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவத்தினையடுத்து, குறித்த இளைஞன் மறுதினம் அதிகாலை ஒரு மணியளவில் யாழ். மேலதிக நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகர முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் அரசியல்குழு நேற்று ஐரோப்பா புறப்பட்டது

விடுதலைப்புலிகளின் அரசியலகுழு தமது ஐரோப்பிய பயணத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் யுஎல் 557 என்ற விமானம் மூலம இவர்கள் ஜெனீவாவுக்கு பயணமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழச் செல்வன் நீதி நிர்வாக பொறுப்பாளர் பரா காவல்துறை பொறுபபாளர் நடேசன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட இக்குழுவினர் நேற்றுப் புறப்பட்டுள்ளன.(32)

## சிறுவர்தின நிகழ்வைக் கொண்டாட வவுனியாவில் பல அமைப்புகள் ஏற்பாடு!

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் சர்வ தேச சிறுவர் தின நிகழ்வைக் கொண்டாட சகல அமைப்புக்களும் தயாராகி வருகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இந்த நிகழ்வினைக் கொண்டாடவுள்ளன. இதே போன்று திருமறைக் கல்மன்றம் வவுனியா நெளுக் குளத்தில் சிறுவர் தினத்தினைத் கொண்டாட வுள்ளது வவுனியா மாவட்டத்தின் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் தமிழர் புனர் வாழ்வுக் கழகமும், கல்வி மேம்பாட்டு நிறுவனமும், வவுனியா அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நகரசபை மண்டபத்தில் கொண்டாட இருப்பதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிக்கின்றது பிரதேச மட்டங்களின் சிறுவர் நாள் நிகழ்வை முன்னிட்டுத் தெரிவுகள் 20ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெற்றுள்ளது 27ஆம் திகதி பொதுச் சிரமதானமும் 28ஆம் திகதி பிரதேசமட்டத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் சிரமதானம் இடம் பெற்றுள்ளது. அத்துடன் 26 ஆம் திகதி முதல் கொடிவாரமும் வவுனியாவில் கடைப் பிடிக்கப்பட்டு வருவதாகவும் தமிழர் புனர்வாழ்வு கழகம் தெரிவிக்கின்றது.(21)

## மன்னார் கடற்பரப்பில் இந்திய றோலர்களின் அத்து மீறல்களைக் கண்டித்து உண்ணாவிரதம் இருக்க முடிவு

இந்திய ரோலர்கள் மன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறியமை தொடர்பாக இனிமேல் பொறுக்க முடியாதெனவும், இதனை எதிர்த் துத் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாதகவும், மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம் ஒன்றிணைந்து மன்னார் ஆஜருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது. இந்திய மீனவர்களின் படகுகள் எமது கடற்பரப்பில் அத்துமீறி வந்து செல்வதால் நாம் பாரிய கஷ்ரங்களுக்கும் பாதிப்புக்களுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவிகள் மீது பாலியல் இம்சை அதிபருக்கு 18 மாதச்சிறை

(செட்டிகுளம்)

வவுனியாவில் உள்ள சிங்களப் பாடசாலை ஒன்றில் 13 வயது நிரம்பிய மூன்று மாணவிகளைப் பாலியல் ரீதியான இம்சைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதிபர் ஒருவருக்கு 18 மாத சிறைதண்டனையும், தலா பத்து ஆயிரம் வீதம் முப்பதாயிரம் தண்டப் பணம் செலுத்துமாறு நேற்று வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார் சம்பவம் 2000 ஆம் ஆண்டு ஆவணி மாதம இடம் பெற்றுள்ளது.

பாடசாலை முடிந்த பின்னர் மாலை நேர வகுப்பு என்று கூறி மாணவிகளைத் தனித்தனியாக அறைக்கு அழைத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு கோரிய அனைவருக்கும் அதிகூடிய பாதுகாப்பு வழங்கப்பட்டது

### -சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் பாதுகாப்புக் கோரியிருந்த சகல அரசியல் வாதிகளுக்கும் அதி கூடிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்: நிராயுத அரசியல் கட்சி உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதை அரசாங்கம் என்ற வகையில் தொடர்ந்தும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

அமெரிக்க தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 10.30 மணிக்கு கொழும்பு அமெரிக்க தூதுவராலயத்தில் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான, கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கைக்குண்டுவீச்சு

மட்டக்களப்பு-வாழைச் சேனை வீதி சித்தாண்டி உபதபாலகத்தின் மீது செவ்வாய் இரவு கைக்குண்டுத்தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் இனந்தெரியாத ஒருவர் இந்தத் தபாலகத்தின் மேல் செவ்வாயன்று இரவு கைக்குண்டொன்றை வீசி எறிந்து விட்டு இருட்டினுள் மறைந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியூடான போக்குவரத்து நேர நீடிப்பு எமக்கு அறிவிப்புக் கிடைக்கவில்லை

### - செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கான ஏ.9 வீதியூடான போக்குவரத்து நேரத்தினை மாலை 7 மணி வரை நீடிப்பது தொடர்பான எந்தவொரு அறிவிப்பும் எத்தரப்பிடமிருந்தும் தமக்குக் கிடைக்கவில்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் யாழ்.குடா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த சனாதிபதியின் ஆலோசகர் மற்றும் அமைச்சு செயலாளர் ஹரீம் பீரிஸ் நாளை முதல் முகமாலையூடான போக்குவரத்து காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை

(12ஆம் பக்கம் பார்க்க)

# நாவற்குழி மகாவித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் நாவற்குழி மகாவித்தியாலயத்தின் 2004ஆம் ஆண்டு பரிசில்நாள் நிகழ்வு வித்தியாலய முதல்வர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலாநிதி சபா ஜெயராசா அவர்களும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி.பானுமதி ஜெயராசா வழங்கவுள்ளார்.

# வவு.வில் மின்விளக்குகள் ஒழுங்காக இயங்காததால் சிரமம்

வவுனியா மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களிலும், நகர் புறத்திலும் உள்ள மின் விளக்குகள் ஒழுங்காக இயங்குவதில்லை. இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர். மாலை வேலைகளில் நேரகாலத்துடன் இருளாகுவதால் மாலைநேர வகுப்புக்களை முடித்துக்கொண்டு செல்லும் மாணவிகள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி கிளை

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 3.10.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நிறுவனக் கேட்போர் கூடத்தில் கௌரவ தலைவர் திரு.கார்த்திகேசு அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிநிரலுடன் கூடிய கூட்ட அறிவித்தல்கள் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் 2002,2003ஆம் ஆண்டிற்கான எண்பார்வை அறிக்கைகள் நிறுவனத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

க.கணேஸ்
கௌரவ செயலாளர்.

(சி-10445)

## தமிழீழப் போக்குவரவுக்கழகப் பயணியர் பேருந்துப்பணி

## கிளிநொச்சி– கண்டாவளை

மேற்படி பேருந்துப்பணி 04.10.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**கிளிநொச்சி – கண்டாவளை**

| | கிளிநொச்சி | பரந்தன் | வெளிக்கண்டல் | கண்டாவளை |
|---|---|---|---|---|
| காலை | 06.30 | 06.50 | 07.10 | 07.30 |
| பகல் | 02.00 | 02.20 | 02.40 | 03.00 |

**கண்டாவளை – கிளிநொச்சி**

| | கண்டாவளை | வெளிக்கண்டல் | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| காலை | 07.40 | 08.00 | 08.20 | 08.40 |
| மாலை | 03.15 | 03.35 | 03.55 | 04.15 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

(சி.10240)

## தமிழீழப் போக்குவரவுக்கழகப் பாடசாலை பேருந்துப்பணி

## விசுவமடு – கிளிநொச்சி

மேற்படி பேருந்துப்பணி பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் நலன்கருதி 04.10.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**விசுவமடு – கிளிநொச்சி**

| | விசுவமடு | வெளிக்கண்டல் | முரசுமோட்டை | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை | 07.00 | 07.25 | 07.35 | 07.45 | 08.00 |

**கிளிநொச்சி – விசுவமடு**

| | கிளிநொச்சி | பரந்தன் | முரசுமோட்டை | வெளிக்கண்டல் | விசுவமடு |
|---|---|---|---|---|---|
| பகல் | 01.45 | 02.00 - 02.10 | 02.20 | 02.30 | 03.00 |

குறிப்பு : பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் மட்டும் பயணத்தை மேற்கொள்ளலாம்.

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

## தமிழீழப் போக்குவரவுக்கழகப் பாடசாலை பேருந்துப்பணி

## நாயாறு – முல்லைத்தீவு

மேற்படி பேருந்துப்பணி பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் நலன்கருதி 04.10.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

| | நாயாறு | செம்மலை | முல்லைத்தீவு |
|---|---|---|---|
| காலை | 06.45 | 07.00 | 07.45 |

| | முல்லைத்தீவு | செம்மலை | நாயாறு |
|---|---|---|---|
| பகல் | 02.15 | 02..30 | 03.15 |

குறிப்பு : பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற பணியாளர்கள் மட்டும் பயணத்தை மேற்கொள்ளலாம்.

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி, முல்லைத்தீவு.

(சி.10239)

# சர்வதேச நாடுகளை அச்சுறுத்தும் மசகு எண்ணெய் விலையேற்றம்!

## பெரல் 50 டொலர்களைத் தாண்டியது

**மசகு எண்ணெயின் விலை பெரல் 50 அமெரிக்க டொலர்களுக்கு மேலாக உயர்ந்துள்ளது. இந்த விலையுயர்வை கட்டுப்படுத்துவதற்கு எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கப் போவதாக சவுதி அரேபியா அறிவித்துள்ளது.**

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

அத்துடன் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் வறுமை நாடுகளும் பல்வேறு சிக்கல்களை எதிர் நேக்கியுள்ளன. நைஜீரியாவில் ஏற்பட்ட எரிபொருள் உற்பத்திப் பாதிப்பு காரணமாக கடந்த 21 வருடங்களில் இல்லாத வகையில் மசகு எண்ணெய் பெரல் ஒன்று 50.47 டொலர்களினைக் கடந்து வருகின்றது. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரிவிலுள்ள பழங்குடி இனத்தவர்கள், அரசியல் சீர்திருத்தம் கோரி அரசுக்கெதிரான போராட்டத்தை நடத்தி வருவதன் காரணமாக அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் சர்வதேச சந்தையில் எண்ணெய் உற்பத்தி கணிசமான அளவு பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்காவின் பொருளாதாரத்திலும் பல்வேறு சிக்கல்கள் இதனால் ஏற்படும் என்று வர்த்தக அவதானிகள் கூறியுள்ளனர்.சவுதி அரேபியாவில் எண்ணெய் உற்பத்தியாளர்கள் நாளொன்றிற்கு ஒன்பதரை மில்லியன் பீப்பாக்களிலிருந்து 11 மில்லியன் பீப்பாக்களாக உயர்த்தப்படும் என்று சவுதி எண்ணெய்த் துறை அமைச்சர் கூறியுள்ளார். ஈராக்,சவுதி அரேபியா, நைஜீரியா போன்ற நாடுகளிலிருந்து தொடர்ந்து சந்தைக்கு எண்ணெய் வருமா? எனும் சந்தேகமே இந்த விலையேற்றத்திற்கு காரணமாக இருக்கலாமென்று வர்த்தகர்கள் கூறியுள்ளனர். எண்ணெய் விலை எண்ணிக்கையளவில் தற்போது வரலாற்றிலேயே அதி உச்ச அளவை அடைந்துள்ளது. ஆனால் பணவீக்கத்தைக்கருத்தில் கொண்டால் 20 ஆண்டுகளில் முன்னைய விலைக்கான அளவை எட்டவில்லை என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.



சூடான் அரசும், மக்கள் விடுதலை இயக்கமும் உலகத்தவரின் உடனடி நிவாரணத்தை கோரியுள்ள நிலையில் டார்பர் நகரில் நிவாரணத்துக்காகக் காத்திருக்கும் சிறுவர்கள்.

## 6 பணயக் கைதிகள் விடுதலை

ஈராக் தீவிரவாதிகளினால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த இத்தாலியப் பெண்கள் இருவர் உட்பட ஆறு பணயக் கைதிகளைத் தீவிரவாதிகள் நேற்று விடுதலை செய்துள்ளனர்.

ஆனால் பிரித்தானியாவின் பணயக் கைதி விடுதலை செய்யப்படவில்லை. இவருடன் ஷாங் ஊடகவியலாளர்கள் இருவரும் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த இத்தாலியைச் சேர்ந்த பெண்களான சமூக சேவையாளர்கள் இருவர் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் பிடித்துச் செல்லப்பட்டனர்.

ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப் படையினருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் இத்தாலியப் படையினர் ஈராக்கிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் என்று தீவிரவாதிகள் கோரியிருந்தனர்.

இதனையடுத்து ஈராக் தீவிரவாதிகளுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இத்தாலியப் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களைத் தாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

# சதாம் சிறைப்பிடிக்கப்பட்ட பின்னர் உலகின் பாதுகாப்பு மேம்பட்டுள்ளது

**- பிரிட்டிஷ் பிரதமர் கூறுகிறார்**

(லண்டன்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என்ற விடயம் பின்னர் தவறாகிப்போனதால் அந்தக் கருத்தைக் கூறியதற்காக தாம் மன்னிப்புக் கோரமுடியுமென்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் கூறியுள்ளார்.

இருந்தபோதிலும் ஈராக்கில் சர்வாதிகாரியாக இருந்த சதாம் ஹுசைனை பதவியிலிருந்து அகற்றியதற்காக தம்மால் மன்னிப்புக் கோரமுடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனை ஆளும் தொழிற் கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ரொனிபிளேயர் ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் ஆட்சிப்பீடத்தில் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டதையடுத்து உலகம் பாதுகாப்பான இடமாக மாறியிருப்பதில் மேம்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். இதன்போது இவரது கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்கின் அமைதிப் பாதை பற்றிப் பேசிய ரொனிபிளேயர் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க சனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு மத்திய கிழக்கு அமைதிப்பாதையினை மேம்படுத்தும் விடயத்திற்குத் தம்மைப் பொறுத்த அளவில் முன்னுரிமை அளிக்கப்போவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஈராக்கின் தற்போதைய சூழலில் நீதியான தேர்தலுக்கு வாய்ப்பில்லை

**- ஜோர்தானிய மன்னர் கருத்து**

ஈராக்கின் தற்போதைய சூழலில் அங்கு நீதியானதொரு தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று ஜோர்தானிய மன்னர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரான்ஸ் சனாதிபதி ஜக்ஸ் ஸ்ராக்குடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அவர் தொலைக்காட்சி ஒன்றிற்கு இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக்கின் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றமடையாமல் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட்டால் தீவிரவாதிகளே பலனடைவார்கள் என்றும் அவர் கூறியுள் ளார்.

அத்துடன் ஈராக்கில் மோதல்கள் நடைபெறும் பகுதிகளைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டால் அந்நாட்டில் இது பிரிவினையை ஏற்படுத்தும். என்றும் அவர் எச்சரித்துள்ளார்.



பாக்தாத்தில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பையடுத்து சம்பவ இடத்தை அவதானிக்கும் அமெரிக்கப்படையினரும், ஈராக்கியப் பொலிசாரும்.

## சி.என்.என் பணியாளரை விடுவிக்க தீவிர முயற்சி

பலஸ்தீனத்தின் காஸாப் பிரதேசத்தின் முகமூடியணிந்த இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ள சி.என்.என் செய்தி நிறுவனத்தின் பணியாளர் ஒருவரை விடுவிப்பதற்கான முயற்சிகளை இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன அதிகார பீடங்கள் மேற்கொண்டுள்ளன.

காஸாப் பிரதேசத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்ட 40 வயதான றியாட்அலி எனும் சி.என்.என். செய்தி நிறுவனச் செய்தியாளர் அந்தப் பிரதேசத்திலேயே கடத்தப்பட்டு மறைக்கப்பட்டிருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகின்றது. ஆனால் இவரை யார் கடத்தியது எனும் விபரங்கள் தெரியவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பதவி விலகும் சனாதிபதிக்கு ரூ18 கோடியில் சொகுசு வீடு

(ஜாகார்த்தா)

இந்தோனேசிய சனாதிபதி பதவியில் இருந்து வெளியேறவுள்ள மேகவதி சுகர்ணோபுத்திரிக்கு சுமார் 18கோடி ரூபாய் செலவில் வீட்டு வசதி செய்துதர வழிவகுக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதாவது அந்நாட்டின் முன்னாள் சனாதிபதி மற்றும் துணை சனாதிபதிக்கு வீடுஉள்ளிட்ட இருப்பிட வசதிகளுக்காகப் 18கோடி ரூபாவிற்குமேல் நிதி ஒதுக்க அரசு அனுமதிக்கும் இதற்கான சட்டத்தில் திங்கட்கிழமை மேகவதி கையெழுத்திட்டார்.



பாக்தாத்தில் ஹைபா வீதியில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலையடுத்து அங்கு தேடுதல் நடத்தும் 303 ஆவது ஈராக்கியப் படைப்பிரிவினர்.

# 'பறவை நோய்' மனிதனைத் தாக்குமா? உலக சுகாதார ஸ்தாபனம் ஆராய்வு

பறவை நோய் மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா? என்பது குறித்துத் தாய்லாந்தில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் இடம் பெற்றிருக்கலாமென்று முதற்தடவையாக இனம் காணப்பட்டதையடுத்தே இது குறித்து ஆராய்ந்து வருவதாக இந்த ஸ்தாபனம் கூறியுள்ளது.

தாய்லாந்தில் கடந்த வாரம் பறவை நோயினால் ஒரு பெண் உயிரிழந்துள்ளார். அந்தப் பெண் மணியின் மகளிடமிருந்தே அவருக்குப் பறவை நோய் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று தாய்லாந்து அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பெண்மணியின் மகள் ஏற்கனவே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படுவதற்கு முன்பே, மகளுடைய உடல எரிக்கப்பட்டு விட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.




தாய்லாந்தில் இரண்டாவது முறையாக ஏற்பட்டுள்ள பறவைக்காய்ச்சல் தொடர்பான செய்தி வெளியாகியுள்ள பத்திரிகை வைக்கப்பட்ட இடத்தில் நிற்கும் ஒருவர்.



# சிறுவர் உரிமைகளும் வாழ்வுக்கான பொறுப்பும்

**நாளை சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**

உலகளாவிய ரீதியில் சர்வதேச சிறுவர்தினம் நாளை அனுஷ்டிக்கப்படுகிறது. சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுவதன் நோக்கமென்ன? அல்லது இத்தினத்தின் மூலம் சிறுவர்கள் தொடர்பாக ஏற்படுத்தப்படும் விழிப்புணர்வு என்ன? என்ற கேள்விகள் நிச்சயமாக எல்லோர் சிந்தனையிலும் தோன்றிமறையும் ஒன்றாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும் சிறுவர் உரிமைகள் எப்பொழுதும் மதிக்கப்படவேண்டும். பாதுகாக்கப்படவேண்டும் என்பதே இன்று சர்வதேச ரீதியான கருத்தாகும் அடக்கு முறைகளில் இருந்து ஒரு சமூகம் அல்லது ஒரு இனம் கொதித்தெழுந்து தமது உரிமைகள் தொடர்பாக குரலெழுப்பிவரும் அதே வேளை உலகிற்கு எடுத்துச்சொல்லி உரிமைகேட்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் விசேட தினங்கள் கொண்டாடப்பட்டு அல்லது அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சிறுவர் உரிமைகள் தொடர்பில் இன்று பல்வேறு நாடுகளிலும் உரிமைகள் மீறப்படுகின்றன. சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பல்வேறு வேதனைகளை அனுபவித்து வருகின்றார்கள் இவர்கள் இன்று குரல் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்களா? அல்லது இவர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடியவர்கள் யார்? அபிவிருத்தியடைந்த அமெரிக்க,ஐரோப்பிய நாடுகளிலும் சரி, அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் சரி சிறுவர்,உரிமைகள் கணிசமான அளவு மீறப்பட்டு வருகின்றதெனினும், இவ்விரு பிரதேசங்களிலும் மீறப்படும் உரிமைகளும், சிறுவர்கள் அனுபவிக்கும் நெருக்கடிகளும் வேறுபட்டவை.

எடுத்துக்காட்டுக்குக் கூறப்போனால் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பெருமளவில் பசி,பட்டினி, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், துன்புறுத்துதல், பாலியல் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்து காணப்படும் உரிமை மீறல்களாகும். இதற்கு மாறாக வளர்ச்சியடைந்த ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பெருமளவில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதும், உழைப்பு நோக்கம் கருதி முழுமையான கல்விக்கு அவர்களையிட்டுச்செல்லாது தொழில்களில் ஈடுபடுத்தும் வழக்கமும் காணப்பட்டு வருகின்றது.

ஏனெனில் சிறுவர்கள் பாதுகாப்பு, உரிமைகளைப்பாதுகாப்பதில் இன்று யுனிசெப் என்று சொல்லப்படுகின்ற ஐ.நா.வின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பானது நிதி மற்றும் கல்விக்கான விடயங்களில் பெரும்பாலான நாடுகளில் அதன் பணியைச் செய்து வருவதனை நோக்கமுடியும். இது எல்லாநாடுகளிலும் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தையே எடுத்துக்காட்டுகின்றது. இன்று சிறுவர் உரிமைகள் பெருமளவில் மீறப்பட்டுவரும் நாடுகள் வரிசையில் சூடான், எதியோப்பியா, இந்தியாவின் மேற்கு வங்காளம் ஆகியன உள்ளன.

பெரும்பாலும் யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலேதான் சிறுவர் உரிமைகள் அதிகமான அளவில் மீறப்பட்டு வந்திருக்கின்றன. காரணம் யுத்தத்திலே ஈடுபடும் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் அங்கே ஏற்படுகின்ற அழிவுகள், இடப்பெயர்வுகள், உணவுத்தட்டுபாடு போன்றனவும், பாடசாலை, மதவழிபாட்டிடங்களிலே மக்கள் தஞ்சம் புகுவதினால் அங்கே காலவரையறையின்றி கல்வி புறக்கணிக்கப்படுவதும், கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முற்றாகவே முடங்கிப்போகும் சந்தர்ப்பங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

இது மட்டுமல்லாது சிறுவர்களுக்கு பெற்றோர்களோ அல்லது உரித்துடையோர்களோ போதிய பாதுகாப்பு, பராமரிப்பு என்பவற்ற்றை வழங்கமுடியாத நிலை காணப்படுவதனால் பெரியோர்களின் ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை, குடும்பஉறவுமுறைகள் மற்றும் தீய பழக்கவழக்கங்களை சிறுவர்கள் அவதானிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் இவர்கள் இலகுவிலே தீய பழக்கங்களில் வீழ்ந்துவிடுவதும் உட்படுத்தப்படுவதும் அதிகமாகக் காணப்படுகின்றது.

முன்னர் போர் நடைபெற்ற எரித்திரியா மற்றும் இலங்கையின் வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட யுத்தமும் இதில் தமிழ் மக்கள் பெருமளவானோரும் சிறுவர்கள் உயிரிழந்தமையும், பாதிக்கப்பட்டமையும் அறிந்ததே. தற்போது பதட்டநிலையிலே இருந்து கொண்டிருக்கும் ஈராக்கிலும் சிறுவர்கள் மேற்சொன்ன இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமையையும் கூறமுடியும்.

சிறிலங்காவிலே தமது பருவகால விடுமுறைகளைக்கழிக்க வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பெருமளவானோர் இங்கேயுள்ள வசதி குறைந்த அல்லது வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களைத் தமது உதவிக்கெனப் பணத்தைக் காட்டி அவர்களுக்கு ஆசைகளை ஊட்டி அழைத்துச்சென்று உல்லாச விடுதிகளிலும் ஹோட்டல்களிலும் வைத்துப் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்துகின்றனர். இது பல ஆண்டு காலமாக நடைபெற்று வருகின்ற நிகழ்வாகக் காணப்படுகின்றது.

இச் சம்பவங்கள் சாதாரணமாக நடைபெற்று வரும் நிகழ்வுகளாகக் காணப்படுவதற்கு குற்றச்செயல்கள் அதிகரிக்கப்படுவதற்கும் சிறிலங்காவின் சிவில் பாதுகாப்பு, குற்றத்தடுப்புப்பிரிவினரின் செம்மையான கவனிப்பு [illegible]மையும், பெருமளவு லஞ்ச ஊழல் நிறைந்ததாகக் காணப்படுவதும் காரணமாகும்.

## வடகிழக்கில் சிறுவரின் நிலை

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் நிலவும் சிறுவர் உரிமை மீறல்களும், சிறுவர் வாழ்வுக்கான நெருக்கடிகளும், அவலங்களும் ஒன்றும் மறுப்பதற்கில்லை. எனினும் இங்கே நிலவி வரும் சிறுவர் உரிமை மீறல் நெருக்கடிகள் என்பனவற்றிற்கு பெருமளவு அரசியல் மற்றும் யுத்தம், அமைதியின்மை போன்ற [illegible]ப்பு நிலை ஸ்திரமின்மையால் ஏற்பட்ட சம்பவங்களே பிரதான காரணிகளாக உள்ளன.

கடந்த 20 ஆண்டுகால மோசமான யுத்தத்தினால் பெருமளவான சிறுவர்கள் தமது கல்வி வாய்ப்பை இழந்தமையும், குடும்பங்களில் நிலவும் வறுமையினாலும், பாதுகாப்பின்மையினாலும் அவர்களைச் சிறு வயதிலேயே தொழில்களில் ஈடுபட வைத்தமையும் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

*இதனை விட அனேக சிறுவர்கள் தமது பராமரிப்பாளர்களை இழந்துள்ளனர் இதனால் அவர்கள் உணவிற்குக் கையேந்தும் நிலையேற்பட்டது.

## சிறுவர் விடயத்தில் புலிகள் மீதான குற்றச்சாட்டு

சிறுவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள், புலிகள் அவர்களை யுத்த முனையிலே நிறுத்தி வருகிறார்கள் என்பது அண்மைய காலங்களில் சிறிலங்கா அரசாலும், சர்வதேசத் தொண்டர் ஸ்தாபனங்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் ஒரு கருத்தாக நிலவி வருகிறது.

உண்மையிலேபே சிறுவர்கள் அல்லது 18 வயதிற்குக் குறைந்தவர்கள் அன்றி எவருமே விடுதலைப்புலிகள் அமைப்பில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படுவதில்லை. அவர்கள் தாமாகவே வந்து புலிகள் அமைப்பில் இணைந்திருக்கிறார்கள். அவ்வப்போது அப்படிப்பட்ட சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைப்பதும் அவர்களின் கல்விக்கான, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் புலிகள் செய்து வரும் மனிதாபிமான செயற்பாடுகளாகும்.

ஏன் புலிகள் அமைப்பில் தாமாக வந்து இணைகிறார்கள் என்பதனை சர்வதேசமோ அல்லது சிறிலங்கா அரச தரப்போ நேரில் கண்கொண்டு பார்ப்பதில்லை. எழுந்தமானமாகக் கருத்துக்களை வெளியிட்டு விடுகிறார்கள். உண்மையிலேயே வடக்குக் கிழக்கில் நடைபெற்ற யுத்தத்தினால் 'அதனால் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மக்கள் இன்னும் மீண்டு விடவில்லை. அல்லது மக்களது வாழ்வில் சுபீட்சம் ஏற்படுமளவிற்கு அரசாலோ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலோ அபிவிருத்திப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டு இவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடவுமில்லை.

இந்த நிலையிலே பெருமளவு மக்கள் தமது வாழ்க்கையை ஓட்டக்கூடிய அன்றாடத் தேவைகளைக் கூட நிவர்த்தி செய்ய முடியாது. பெருமளவு திண்டாடுகிறார்கள். இந்த நிலையிலே சிறுவர்களுக்குப் போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவோ, அவர்களை முறையான கல்வியில் ஒழுக்க வழக்கத்தில், ஈடுபடுத்தவோ கூடிய பெ[illegible]ருளாதார வளம் இருக்கவில்லை.

## தமிழர் புனர்வாழ்வுக்கழகச் சிறுவர் பராமரிப்பு

சிறுவர் பாதுகாப்பு அவர்களின், உரிமைகளை மதிக்கும் வகையிலே அனேகமான சிறுவர்கள் கிட்டத்தட்ட 1340 சிறுவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரின் நேரடிப் பராமரிப்பிலும், தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரனையில் இயங்கி வரும் சிறுவர் இல்லங்களிலும் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இங்கே ஒரு ஒழுங்கு முறையான நிர்வாகமும் சிறுவர்களுக்கான கல்வி, விளையாட்டு, கலைத்துறைப் பயிற்சிகள் , பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்று வருகின்றன. இதில் வடக்கு கிழக்குப் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களே பெரும்பாலும் உள்ளனர். சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட இச்செயல்திட்டத்தின் மூலம் எமது தாயகத்தில் பெருமளவான சிறுவர்களும் அவர்களின் உரிமைகளும், பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இச்செயலினால் எமது எதிர்கால சமுதாயத்தின் ஒரு பகுதியினர் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இது ஓர் உயரிய சிந்தனையாகவும் உன்னத செயற்பாடாகவுமே நோக்கப்பட வேண்டியது.

இதனை விடப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோரை இழந்த பெருமளவு சிறுவர்கள், குழந்தைகள், விடுதலைப் புலிகள் அமைப்பின் நேரடிக் கண்காணிப்பிலே இயங்கி வரும் நிலையங்களாக " செஞ்சோலை", "காந்தரூபன் அறிவுச்சோலை" போன்றவற்றிலும் , போராட்டத்திலே இணைய வந்த வயது குறைந்த சிறுவர்களுக்கென அமைக்கப்பட்ட, 'இடைத்தங்கல்' முகாம்களிலும் வைத்து பராமரித்து, அவர்களுக்கான மறுவாழ்வு அளித்து வருகிறார்கள்.

இப்படியான வேலைத்திட்டங்களைக் கண்டுகொள்ளாமல், வெறுமனே விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்து வருகிறார்கள் என்று உழறுவதைச் சர்வதேசமும், சிங்கள தேசமும் நிறுத்த வேண்டும். இப்படிச் சிறுவர்கள் மேல் தமக்குத் தான் அதிக அக்கறை இருப்பது போல் காட்டிக்கொள்ள முயல்பவர்கள். கடந்த 20 ஆண்டுகால யுத்தத்திலே பாடசாலைகள் மீது குண்டு வீசப்பட்டபோதும், பெருமளவு சிறுவர்கள் கொல்லப்பட்டபோதும் கல்வி இழந்து பாடசாலைகள் இல்லாதிருந்த வேளையும் கவனிக்கத் தவறிவிட்டார்கள். இதனைவிட வடக்குக் கிழக்கிலே அரச சார்பற்ற நிறுவனங்களான (திருச்சபைகளின் நிர்வாகத்தினரால்) பல சிறுவர் பராமரிப்பு மையங்களும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்துமத நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் சில சிறுவர் பாராமரிப்பு மையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றிலே பயன்பெற்று வரும் பெருமளவான சிறுவர்களும், தமது பெற்றோர்களை இழந்தவர்களும், வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவையாவும் வடக்கு கிழக்குப்பிரதேசத்திலேயே அதிகமாக உள்ளன. ஏனெனில் தென்னிலங்கையை விட வடக்கு கிழக்குத்தமிழர் வாழும் பகுதியிலேயே கொடிய யுத்தம் நடைபெற்றது. யுத்தம் மூலம் ஒரு வருங்கால சந்ததியாகிய சிறுவர்களின் கல்வியையும், வாழ்வுரிமையையும் அழித்து விட முற்பட்டதையே வெளிக்காட்டுகிறது. எனினும் அந்த முயற்சி பெருமளவு தோல்வியடைந்ததையே பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு உணர்த்தியிருக்கும். இன்று எமது தாயகப்பகுதியிலேயே இயங்கிவரும் சிறுவர் இல்லங்கள் சிறுவர் பாதுகாப்பு, அவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் எனும் செயல்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இது அவர்களுக்கான தார்மீகப் பணியாக இருக்கின்றது. எனினும் அண்மையிலேயே தொடங்கப்பட்ட த.பு.க. நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் இல்லங்களின் பிள்ளைகளின் வளர்ச்சி, பராமரிப்போடு ஒப்பிடும்போது தனியார் நிர்வாகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் இல்லங்களில் வளர்ச்சியும், மேம்பாடும் காணப்படுகிறதா? ஏனெனில் இவ்வில்லங்களின் வயது மிக மூப்புடையதாக இருக்கும் அளவுக்கு வளர்ச்சிப் போக்கு இருக்க வல்லை.சிறுவர்களைப் பராமரிக்கும பொறுப்பை எடுத்துக்கொண்ட நிறுவனங்கள் ஒன்றை நிச்சயமாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது சிறுவர்களை எதிர்கால வாழ்க் கைக்கு ஏற்ற விதத்திலே சகல துறைகளிலும் பயிற்றுவிக்க வேண்டும். அதாவது அவர்களை ஒரு முழுமையான மனிதனாக உருவாக்க வேண்டுமெனில் அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்துதல் வேண்டும் இதனைச் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாக வேண்டும். இல்லையேல் சிறுவர் உரிமைகளைப் பற்றிக் கதைப்பதில் பிரயோசனமில்லை. சிறுவர் தொடர்பான நிறுவனங்கள் தமது பொறுப்பையும் பணியையும் சரியாகப் புரிந்து கொண்டு செயற்படத் தயாராக வேண்டும். சிறுவர் தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறுவர் மீதான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, சிறுவர் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அதுவே சிறுவர் தினத்தின் அடிப்படைத் தேவையாக உள்ளது.

ஸ்ரீபன்

–கிளிநொச்சி. நகர வியாபார நிலையமொன்றில்

# விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் காலாவதியான பொருட்கள் கண்டுபிடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டு ,மேற்படி பொருட்கள் உடன் தீயிட்டு அழிக்கப்பட்டன.

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் பகல் கிளிநொச்சிநகரிலுள்ள வியாபார நிலையமொன்றின்மீது மேற்கொண்ட திடீர்ச்சோதனையின் போது பதினையாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய காலாவதியான லக்ஸ்பிறே பால்மா, இனிப்பு வகைகள், பிஸ்கட்டுகள் மற்றும் பதனிடப்பட்ட உணவுவகைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அப்பொருட்கள் அனைத்தும் பொது இடத்தில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டன.

வியாபார நிலையங்களில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் மக்கள் பொருட்களின் உற்பத்தி மற்றும் காலாவதியாகும் திகதிகளைக் கவனித்துப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் தமிழீழ நிதித்துறைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (சோ)



# பூநகரி ப.நோ.கூ.சங்கத்தின் 3 கிளைகளை புனரமைக்க நடவடிக்கை

(பூநகரி)

பூநகரியில் வலம்புரி இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அளிக்கப்பட்ட பூநகரி ப.நோ.கூ சங்கக்கிளைகளான ஞானிமடம், வில்லடி, பள்ளிக்குடாக் கிளைகள் மீள அமைக்கப்படவுள்ளன.இம் மூன்று கிளைகளிலும் இம் மீளமைப்புக்கு அரசஅதிபரின் புனர்வாழ்வுப் பிரிவில் இருந்து 6 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது என சங்கத்தலைவர் கா.கார்த்திகேசு தெரிவித்தார்.

வலம்புரி இராணுவ நடவடிக்கையின் போது இம் மூன்று கிளைகளாலும் 18 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (34)

# வவுனியா மாமடு மத்திய மருந்தகத் திறப்புவிழா

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு, கிழக்கு அவசரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மூன்று மில்லியன் ரூபா செலவில் மாமடுவில் அமைக்கப்பட்ட மத்திய மருந்தகத் திறப்புவிழா நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் A.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழா நிகழ்வில் மத்திய மருந்தகத்தினை வடக்கு-கிழக்கு மாகாணசுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.எம். எஸ்.ரட்நாயக்க திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வடக்கு,கிழக்கு மாகாணசுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை, வவுனியா மேலதிக அரச அதிபர் இரகுநாதபிள்ளை, வன்னி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, குடிசனத் தொடர்பு அதிகாரி கேணல் சேனநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (10)

## கண்டெடுப்பு

(முள்ளியவளை)

வற்றப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த வைகாசி மாதம் நடைபெற்றபொங்கல் விழாவில் தவற விடப்பட்ட இரண்டு ஆள்அடையாள அட்டைகள் முள்ளியவளைப் பிரதேசக் காவல்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தம், நீர்வேலியைச் சேர்ந்தகுலக் கொழுந்து லிகிந்தினி ஆகியோரது அடையாள அட்டைகளே முள்ளியவளைக் காவல் துறைப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினர் கேட்டுள்ளனர். (ஆ)

# மன்னார் அகதி முகாமில் வசித்த 35பேர் சொந்த இடம் திரும்பினர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள களிமோட்டை அகதி முகாமில் வசித்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 35பேர் தமது சொந்த இடமான முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அளம்பில் என்ற இடத்திற்கு நேற்றுமுன்தினம் காலை அனுப்பிவைக்கப்பட்டனர். இதற்கான ஏற்பாடுகளை நானாட்டான் பிரதேச செயலகம் செய்து கொடுத்தது. மன்னார் கற்கடந்தகுளம் கிராம உத்தியோகத்தர் எஸ்.இராசநாயகம் இவர்களைப் பொறுப்பேற்று தலைமை தாங்கிச் சென்றுள்ளார். (மி)

## சங்கம நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

முல்லை.மாவட்ட பெண்கள் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை முல்லை.மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் மேற் கொண்டுள்ளன.

-உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு-

# வவுனியா தெற்கு.கல்வி வலயத்தில் ஆசிரியர்களிடையே பல்வேறு போட்டிகள்

(வவுனியா செய்தியாளர்)

ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, வவுனியா தெற்குக் கல்வி வலய பாடசாலைகளில் ஆசிரியர்களிடையே கவிதை, கட்டுரை. சித்திரப் போட்டிகள் நடை பெறவுள்ளன.

ஆசிரியர்களின் தமிழ்மொழி எழுத்துத்திறனை மேம்படுத்தல், ஆசிரிய தொழிலின் மகத்துவம், அர்ப்பணிப்பு, விடாமுயற்சி என்பவற்றை ஆசிரியர் மத்தியில் உருவாக்குதல், தூய தமிழ் பண்பாட்டு அறிவை மேம்படுத்தல், ஆசிரியர்களின் ஆக்கத்திறன் செயற்பாட்டை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாக் கொண்டே இப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன் தமது பாடசாலை அதிபரூடாக அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.எ ஒஸ்வேல்ட் கேட்டுள்ளார். (10)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 600 மருத்துவ மாதுக்கள் தெரிவு

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் அறுநூறு மருத்துவ மாதுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ் 600 மருத்துவ மாதுக்களுக்கும் வவுனியா பொது வைத்திய சாலையில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் பயிற்சியளிக்கப்படவுள்ளதாகவும், இவர்களுக்கான பயிற்சி நிறைவு பெற்றதும் இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# புலமைப் பரிசில் பரீட்சை மேலும் சில முடிவுகள்

மேலும் சில பாடசாலைகளின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்:- முல்லை. இரணைப்பாலை றோ.க.வித்தியாலயம்-வெற்றிவேல் சிவனேசன்-142, அ.ஜெயதர்சிகா-139, சி.சார்திகுமார்-136, அ.டில்சான்-131, ர.மனோசிதா-127. கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம்-செ.கஜீபன்-130புள்ளிகள்.புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயம்- செல்வனாயகம் சுபரஞ்சினி-153, செல்வச்சந்திரன் ஜெனனி-137,ஆறுமுகம் மிதுர்சா-130, இராசகுலசிங்கம் சசிப்பிரியா-129, துரைராசா கோமேதினி-127, அழகேந்திரன் ஜனந்திகா-126, ஜெயரஞ்சன் துஜிதன்-124,அமிர்தநாதன் பிரவீன்-124, ஜெயக்குமார் அமிர்தன்-124, மோகன் குகாதீபன்-126. (20)

# நேர் அடம்பன் குளம் ஆழமாக்கப்படுகிறது

(பூநகரி)

நியாப்திட்டத்தின் கீழ் பூநகரி நேர் அடம்பன் குளவேலையான குளக்கட்டு அமைத்தல், ஆழமாக்கல் போன்ற வேலைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன. இவ்வேலைகள் தற்பொழுது 80 வீதம் பூர்த்தியடைந்துள்ளன. இதனால் பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (34)

# நிறை குறைந்த சிறார்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கப்பட்டது

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் 'உலக உணவுத்திட்டத்தின் துரித நிறையெடுப்பும், மதிப்பீடும்' எனும் திட்டத்தில் 1தொடக்கம் 5 வயது வரையான சிறார்களின் நிறை, உயரம் அளவீடு செய்யப்பட்டு சுமார் 200 இற்கும் மேற்பட்ட சிறார்களுக்கு ஊக்குவிப்பு உணவுப் பொதியாக 1கிலோ பருப்பும், 2 கிலோ சீனியும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையங்களூடாக வழங்கப்பட்டுள்ளன. (ஆ)





கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினரால் நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரில் நடாத்தப் பெற்ற பண்பாட்டு ஊர்வலத்தில் இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளின் காட்சிகளை படங்களில் காணலாம். (படம்:-சோதி)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.பாடசாலை முதல்வர் திருமதி. ஜி.நடராசா தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

# மூன்று முரண்பட்ட கட்சிகளுடன் பெரும்பான்மையைப் பெற்றுள்ள அரசாங்கம்

சாம்பாறாகிவிட்ட, ஒன்றையொன்று முரணித்துக்கொண்டு தம் போக்கில் செல்கின்ற தற்போதைய சந்திரிகா தலைமையிலான கூட்டுக்கட்சி அரசபீடத்தில் பல்வேறு வேடிக்கைச் சம்பவங்கள் நிகழ்ந்தேறி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.


சந்திரிகா

இணைந்துகொண்டுள்ள ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினரின் சேர்க்கை புதிய சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடிய நிலை தோன்றியுள்ளது. அதாவது இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவித்துக்கொண்டிருந்த சந்திரிகாவிற்கு மூன்று தலைக்கொள்ளி எறும்பின் நிலை போன்றது எனும் புதிய உதாரணத்தைக் கூறக்கூடிய அளவிற்கு மோசமான நிலையை உருவாக்கி வருகிறது.

அடிப்படையில் இருவேறு எதிர்நிலை அரசியல் கொள்கைகளை உடைய ஜே.வி.பி.யும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒரு வீட்டுக்குள் இருந்து கொண்டே சண்டையிட, இருவரையும் சமாளித்துக் கொண்டு அரசியல் பயணம் செய்ய வேண்டிய பரிதாப நிலையில் சந்திரிகாவின் அரசாங்கம் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

மலையகத் தமிழர்களை இந்திய அரசின் பிராந்திய விஸ்தரிப்பு சக்திகளாக சித்திரிக்கும் இனவாத அரசியல் சித்தாந்தத்தைக் கொண்டுள்ள ஜே.வி.பி. கொள்கையுடன் அரசியல் உயர் பதவிகளை (அமைச்சுப் பொறுப்புக்கள்) பெற்று மக்களிடம் தம் செல்வாக்கை உயர்த்திக்காட்ட எத்தனிப்பது இதற்காக அவர்கள் எந்தக் கட்சியுடனும் கூட்டுச்சேரத் தயாராக இருந்து வருகின்றனர். இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அரசியல் பாணி. அதைத தான் தற்போதும் செய்திருக்கிறாாகள் ஆனால் தற்போதைய நாட்டுக் களச்சூழல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கூட்டுச் சேர்க்கைக்குச் சாதகமாக இருக்கப் போகின்றதா? அல்லது சாதகமாக இருக்கிறதா? எனப் பார்ப்போமேயானால் இவ்விடயத்தில் சந்திரிகா வெற்றியடைந்து விட்டார் போலத்தான் தோன்றுகிறது.


ஆறுமுகம் தொண்டமான்

ஏனெனில் தற்போது அறிவிக்கப்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமானது நேரடியாகவே சாதாரண சாமானிய மக்களைத் தாக்கக்கூடிய பாரிய விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து குரல் கொடுக்காத வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கு வாய்ப் பூட்டு போடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலும் சந்திரிகாவின் கூட்டுக் கட்சி அரசாங்கத்தின் உட் பூசல்கள் வெளித் தெரியத்தொடங்கி இருக்கின்றன. அண்மையில் சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில், "தான் எதிர்க் கட்சியாக இருந்திருந்தால் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி இருப்பேன்" எனத் தெரிவித்திருந்தார். இக் கூற்றிலிருந்து இரு விடயங்கள் புலனாகின்றன.

ஜே.வி.பி. என்கின்ற இனவாதக் கட்சியைத் தன்கூட்டில் வைத்துச் சமாளிக்க முடியாது போன சந்திரிகாவிற்கு புதிதாக


விமல் வீரவன்ச

யினரும், மலையக மக்களின் உரிமைக்காய் போராடும் கட்சியாகத் தம்மை சித்திரிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒரே கூட்டுக்குள் நின்று எவ்வாறு அரசியல் நடத்த முடியும்? என்ற கேள்வி பல அரசியல் அவதானிகள் மத்தியில் எழத்தான் செய்கின்றன.

மேற்கூறப்பட்ட கட்சிகளின் கொள்கைகள் அடிப்படையாக அமைந்தாலும் அவர்களது தற்போதையு அரசியல் பயணங்கள் கட்சிக் கொள்கைக்குப் பொருந்தாத வகையிலேயே இருந்து வருகின்றன.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் தான் கூட்டுச்சேர்ந்த பெரும் கட்சியின் செல்வாக்கைக் குறைத்து தமது கட்சி வளர்ச்சிக்காகச் செயற்பட முனைந்து வருகின்றமை தெரிகிறது. அதாவது சந்திரிகா. தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தாலும் கூட்டுக் கட்சிக்குள் முரண்டுபிடித்து, தலைமைக் கட்சியை விமர்சித்து மக்கள் மத்தியில் செல்வாக்குத் தேட எத்தனித்து நிற்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசோ குறுகிய நோக்கிலான பிரச்சினை. இந்த நிலையில் ஏற்கனவே சம்பளம் போதாமை, நிரந்தர வீடுகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பெருமளவில் பாதிக்கும் விடயமாகவே இதனைக் கொள்ள முடியும். இந்த நிலையில், தனித்து நின்று விலையுயர்வுப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சந்திரிகாவின் கூட்டுக் கட்சிக்குள் இணைந்து கொண்டதனால் வாய்பொத்தி மௌனித்து நிற்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் சந்திரிகா ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்திருக்கிறார்.

1) பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை இணைத்து செயற்படுவது

2) தனது அரசாங்கம் எடுக்கின்ற மக்களைப் பாதிக்கின்ற விடயங்களிற்கு சிறுபான்மை

**முத்தையனூர் ப.துஷ்யந்தன்**

கட்சிகளின் எதிர்ப்பினை பாராளு மன்றத்தில் தடுத்தல் அல்லது குறைத்தல். அதாவது ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி பலமான ஒரு எதிர்க்கட்சியாகச் செயற்படவில்லை என்பது,

மற்றையது விலைவாசி ஏற்றத்திற்கும், தனக்கும் சம்பந்தமில்லை அதாவது தான் ஒரு பாராளுமன்றத்தில் அதிகாரம் கொண்ட ஒருவராக இருந்தாலும் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் சந்திரிகாவினுடையது என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியதன் மூலம் தான் ஒரு சந்திரிகா தலைமையிலான கூட்டுக்கட்சியின் அதிருப்தியாளர் என்பதனை வெளிப்படுத்தி இருக்கிறார்.

இப்படியான செயற்பாடுகள் யாவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்கிற கூட்டுக்கட்சிக்கு வேட்டு வைக்கும் விடயங்களாகவே நோக்கப்படுகின்றன.

குறுகிய இலாப நோக்கிலான, அரசியல் நடத்த,கூடாத கூட்டெல்லாம் சேர்த்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் சந்திரிகா அம்மையாருக்கு எதிர்க்கட்சியால் இருக்கப்போகும் ஆபத்துக்களை விட, தன் கூட்டுக் கட்சியினரால் ஏற்படும் அரசியல் வீழ்ச்சியை சந்திக்கக் காலம் கனதூரம் இல்லை என்பதையே தற்போதைய சிறிலங்கா அரசியல் களநிலவரங்கள் காட்டி நிற்கின்றன.

# தற்போதைய அரசாங்கம் குறித்து மக்கள் குழப்பமாக இருக்கின்றனர்

## முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் தற்போதைய அரசாங்கம் குறித்துக் குழப்பமான நிலையில் இருப்பதாக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மொறட்டுவையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பொருட்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூட்டமைப்பு அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் கூறியபோதிலும், அதனை நிறைவேற்ற முடியாத நிலை தோன்றியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

சமாதானப் பேச்சுவார்த்தை மாத்திரமன்றி போர்நிறுத்த உடன்படிக்கையும் நிலையற்றதாகவுள்ளது. எனினும் இந்த அரசாங்கத்திற்கு அவை பிரச்சினையாகத் தெரியவில்லை. பொருளாதாரம் குறித்தும் பிரச்சினையில்லையென்றே கருதுகின்றனர். உயரும் பொருட்களின் விலையும் பிரச்சினையாகத் தென்படவில்லை. இவர்களுக்குத் தேவையானது, அதிகாரத்தில் இருப்பது மாத்திரமே என்றும் பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## சிரமதானம்

(மல்லாவி)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாந்தை கிழக்கு துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை மல்லாவி வைத்தியசாலைப் பகுதியிலும், பாரதி நகரிலுள்ள பாரதி முன்பள்ளியிலும முன்பள்ளி ஆசிரியர்களினாலும், பெற்றோர்களினாலும் சிரம தானப பணி மேற்கொள்ளப்பட்டுளளமை குறிப்பிடத்தக்கது. (24)

## பாலையடி பொதுச் சந்தையில் கட்டாக்காலி ஆடு, மாடுகளால் தொல்லை

(மல்லாவி)

பாண்டியன் குளம் பிரதேசத்திலுள்ள பாலையடிப் பொதுச் சந்தையில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் தங்கிவருவதால் வியாபாரிகள், பொது மக்கள் பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பாலையடி பொதுச் சந்தையின் சுற்றுப்புறங்களில் வேலிகள் இல்லாமையினால் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்களில் ஆடு, மாடுகள் இரவிலும் பகலிலும் தங்கி வருவதால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை சந்தைப் பகுதியை அண்மித்த பிரதான வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதால் மழைநீர் தேங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

## பண்ணிசைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

நவராத்திரி தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினரால் கிளி/ மாவட்ட வலயக் கல்விப்பணிமனையின் அனுசரணையுடன் பண்ணிசைப் போட்டி நடாத்தப்பெறவுள்ளது.

கிளி/ மாவட்ட பாடசாலைகளுக்கிடையே மூன்று பிரிவுகளாக நடாத்தப் பெறவுள்ள இப்போட்டி விபரங்களை அந்தந்துப் பாடசாலைகளிலும் மற்றும் தலைவர், திருநெறிக்கழகம், கிருஷ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டும் பெற்றுக் கொள்ளலாம். (ஜோ)

# பொருளாதாரத் திட்டங்களில் பாரிய திருப்புமுனை தேவை

ஏழெட்டு மாதங்களுக்கு முன்னதாக கூட்டு வர்த்தகர்கள் ஒன்றியம் சார்பில் அன்று நாங்கள் ரணில் விக்கிரமசிங்க அரசிற்கும், சனாதிபதிக்கும் பல முக்கிய வேண்டுகோள்களை விடுத்தோம். நாட்டில் பொதுத் தேர்தல்களை வைக்காமல் இரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து சுமுகமாக பிரச்சினைகளுக்கு முடிவு காணுங்கள் எனக் கூறினோம். ஆனாலும் இதற்குச் செவிசாய்க்காமல் நாட்டில் பொதுத் தேர்தலையும், மாகாணசபைத் தேர்தல்களையும் சனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடத்தியது. இந்த இரண்டு தேர்தல்களுக்கும் 150கோடி ரூபா செலவாகியது. அன்று நாங்கள் கூறிய கருத்துக்கள் இன்று நாட்டின் நடைமுறைக்கு வந்துள்ளது. பெரும்பான்மைப் பலம் இல்லாமல் ஒரு அரசைக் கலைத்தால் இரண்டு கட்சிகளில் ஒன்று மீண்டும் பெரும்பான்மைப் பலம் இல்லாத ஒரு அரசையே அமைக்கும். ஆகவே பாராளுமன்றத்தில் முக்கியமான பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்து அதைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத நிலைக்கு அரசு தள்ளப்படும். இரண்டு மூன்று தடவைகள் பாராளுமன்றம் கூடியும் அது கலவரத்தில் முடிந்ததை நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள். இதனால் நாட்டின் சமாதானப் பிரச்சினை இப்பொழுது நிறுத்தப்பட்டு, சமாதானம் ஒரு கேள்விக்குறியாக அமைந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் கொள்கைகளும் ஜே.வி.பி யின் அரசியல் கொள்கைகளும், மிக வேறுபட்டதாகவே காணப்படுகின்றன. இது இன்று ஆட்சிக்குள் பெரும் பூசல்களை உண்டுபண்ணியுள்ளது. ஜே.வி.பி யின் கொள்கைப்படி அவர்கள் எக்காரணம் கொண்டும் சமஷ்டி சுயாட்சி முறையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தற்பொழுது இந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்கும் இரு சாராரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆகவே எமக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியுதவிகள் பெரும் கேள்விக்குரியதாகவேயுள்ளன.

இதனால் தேசிய வருமானம் தற்பொழுது குறைந்துள்ளது. ரூபாய் நோட்டுக்களை விட அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளது. அதனால் நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்துள்ளது. இதனால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது டொலரின் பெறுமதி இலங்கை நாணயத்தில் 103 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்தபொழுது டொலரின் பெறுமதி 98ரூபாவிலிருந்து 99 ரூபாவாக அதிகரித்திருந்தது. கடந்த நான்கு மாதங்களில் நாட்டில் ரூபாவின் பெறுமதி நான்கு ரூபாவிலிருந்து ஐந்து ரூபாவாகக் குறைந்திருந்தது. இதனால் இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்தன. தற்பொழுது உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பு அரசாங்கத்தை மீண்டும் கஷ்ரத்திற்குள்ளாக்கியதுடன், ஒரு பீப்பா எண்ணெய் விலை 48 டொலரால் அதிகரித்துள்ளது. இதனால் அரசாங்கத்தைக் குற்றம் கூறுவதில் எந்தப் ப்லனும் கிடையாது. அதாவது உலக சந்தையைக் கட்டுப்படுத்தும் வல்லமை படைத்தவர்கள் இங்கு எவருமில்லை. டொலரின் பெறுமதி அதிகரிப்பும் எண்ணெய் விலை அதிகரிப்பும் மக்களை மீண்டும் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து நெருப்பில் போட்ட கதையாக மாற்றியுள்ளது.

“உரமானியம், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு , க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்தோர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுத்தருவோம்” இவை யாவும் பொதுத் தேர்தல் வாக்குறுதிகளாகும். கடந்த அரசாங்கம் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தி, அரசாங்கச் செலவுகளைக் குறைத்து நாட்டின் நடைமுறைச் செலவுகளை வெகுவாகக் குறைத்தது. ஆனால் இவற்றை மக்கள் நிராகரித்தபடியால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தோல்வியைத் தழுவிக்கொண்டது. ஆகவே மக்கள் வரத்தைப் பெற்றுள்ள தற்போதைய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளைக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்.

பட்டதாரிகளின் பயிற்சிக் காலம் முடிந்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கும் பொழுது பொருளாதாரப் பிரச்சினைகள் மீண்டும் அதிகரிக்கும். மற்றும் உர இறக்குமதிக்கு அரசாங்கம் அதிக பணத்தைச் செலுத்த வேண்டியநிலையில் உள்ளது. மாறுபட்ட பொருளாதாரத் திட்டங்களை இந்த அரசாங்கம் அமுற்படுத்துகின்றது. ரணில் அரசாங்கத்தின் வரவு, செலவுத்திட்டத்தையே இன்றைய சந்திரிகா அரசு முன்வைத்துள்ளது. கடந்த அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைப்படுத்த முடியாமல்போன பல பொருளாதாரத் திட்டங்களை இந்த அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தில் உட்படுத்தியுள்ளது. இதை அமுற்படுத்துவது மிகக் கடினமான காரியமாகும். ஆகவே பொருளாதாரத் திட்டத்தில் பல திருப்பு முனைகளை இந்த அரசாங்கம் கையாள வேண்டியுள்ளது. புதிய வரவுசெலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் அது தோல்வியடையும். ஆகவே தான் ரணில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போன பல திட்டங்களை இந்த வரவு செலவுத்திட்டத்தில் இந்த அரசாங்கம் உட்புகுத்தியுள்ளது. நாட்டின் தற்போதைய நிலையில் 5 சத விகிதத்திற்கு மேல் பொருளாதார வளர்ச்சியை நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு முடியாது. ஆனால் 8 சதவிகித பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு முடியுமென அரசாங்கம் கூறிக்கொண்டாலும் பொருளாதாரம் இன்னும் வளர்ச்சியடையவில்லை. ஆகவே, அரசாங்கத்திற்கு வருமானம் அதிகரிக்கும் மார்க்கங்கள் யாவும் மூடப்பட்டுள்ளதென்பது எமது கருத்தாகும்.

இப்பொழுது தேசிய வருமானத்தில் 16 சதவிகித வரியை அரசாங்கம் வசூலிக்கின்றது. இந்த வரியை 20 சதவீதமாக உயர்த்த வேண்டுமென மத்திய திறைசேரி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. தற்போதைய நாட்டின் வருமானத்தைப்பற்றி நாங்கள் விமர்சித்தால் வரவு குறைவு, செலவு அதிகமாகவே உள்ளது.

தற்பொழுது நாட்டில் பெற்றோலியக் கூட்டு ஸ்தாபனம் சம்பந்தமாக தொழிற் சங்கங்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. இது இப்பொழுது அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அரசாங்கத்திற்கு இதனைத் தீர்த்து வைப்பது மிகக்கடினமான விடயமாகும். இந்திய எண்ணெய் நிறுவனம் இந்த நாட்டிற்கு வந்த பிறகு இந்த நாட்டின் எண்ணெய் விநியோக மையங்களில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. நாட்டின் மூன்றாவது எண்ணெய் விநியோகஸ்தராக இந்திய நிறுவனத்தை எமது அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இதனால் இந்திய அரசு எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடும் சந்தர்ப்பங்களிற்கு இடமுண்டு. எமது எண்ணெய் விநியோகத்தை ஸ்தம்பிதம் அடையச்செய்து, இந்திய நிறுவனத்தின் எண்ணெய் விநியோகத்தை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. இதனால் அவர்களின் அரசியல் தலையீடுகள் எமது நாட்டில் அதிகரிக்கும். இதே போல், இந்தியா, நேபாள உள்நாட்டுப் பிரச்சினைகளில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது. ஆகவே எமது நாடு இந்திய நாட்டு ஆதிக்கத்திற்கு அகப்படாமல் இருப்பதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.




கடந்த அரசாங்கம் 45,000 கோடி ரூபாய் டோக்கியோ நிதியைப் பெறுவதற்கு சகல முயற்சிகளையும் செய்து கொண்டு சமாதான முன்னெடுப் புக்களை தீவிரப்படுத்தும் வேளையில், சந்திரிகா அரசாங்கத்தைக் கலைத்து ஆட்சியைக் கைப்பற்றினார். இன்னும் டோக்கியோ நிதி எமக்குக் கிடைக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இழுபறிநிலையிலுள்ளன. டொலரின் அதிகரிப்பு எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியைத் தற்பொழுது ஏற்படுத்தியுள்ளது. ஆனால் டொலர் இல்லாமல் எமது பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. ஒரு டொலரை 100 ரூபாவிற்கு மேல் அதிகரிக்காமல் இருப்பதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் புதிய அரசு இதைக் கவனத்திற்கு எடுக்காமையால் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இன்னும் ஆறு மாதங்களுக்கிடையில் மீண்டும் டொலரின் பெறுமதி இலங்கை நாணயத்தில் 106 ரூபாவாக அதிகரிப்பதற்கு இடமுண்டு. வெளிநாட்டு இறக்குமதியாளர்கள் பொருட்களை காலம் தாமதித்து எமது நாட்டுக்கு அனுப்புவதால் டொலரின் பெறுமதி அதிகரித்த வண்ணமுள்ளது. ஆகவே இறக்குமதி செய்யும் பொருட்கள் யாவும் உலக சந்தையில் அதிகவிலை கொடுத்து வாங்குவது எமது நாட்டிற்கு தவிர்க்க முடியாது.

இங்கு எமது நாட்டின் நாணயத்தின் பெறுமதி குறைந்துள்ளபடியால் வெளி நாட்டில் தொழில் புரிபவர்கள் இங்கு பணம் அனுப்புவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் தொழில் புரியும் நாடுகளின் வங்கிகளில் வைப்புச் செய்து வருகின்றனர்.

இதனால் தேசிய வருமானம் மிகக் குறைந்துள்ளது. அரசின் பங்காளிக்கட்சி யான ஜே.வி.பியினருக்கும், அரசுக்குமிடையில் தற்பொழுது கடும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மோதல்களால் நாட்டின் பொருளாதாரம் தற்பொழுது சீர்கெட்டுள்ளது. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென ஜே.வி.பியினர் கோசமிடுகின்றனர். அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆயத்தம் செய்யும் பொழுது ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனால் எதிர்ப்புத் தெரிவித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சீரழிக்க வைப்பதே அவர்களின் பிரதான நோக்கம். அரசாங்கம் அவர்களை கூட்டணியில் இருந்து விரட்டி அடிக்கும் வரை அவர்கள் கட்சிக்குள் இருந்து அரசாங்கத்திற்கு குழி தோண்டுவார்கள்.

இவர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினால் சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. அப்படி அவர்களை விலக்காவிட்டால் அவர்கள் அரசாங்கத்தில் தமது நிலையை பலப்படுத்திக் கொள்வார்கள். ஆகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பிக்கு அடிமையாகி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படும்.

இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள வேளையில் பிரதான எதிர்க்கட்சி ஏன் மௌனம் சாதிக்கின்றது. என்பது எமக்குப் புரியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததற்குக் காரணங்களைத் தேடி அதற்கான பரிகாரங்களைக் காணுதல் மிக அவசியம். கட்சியைப் புனரமைப்புச் செய்வது மிக அவசியம். மக்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றி வலம் வருவதற்குப் புதிய திட்டங்களைத் தயார் செய்தல் அவசியம். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் பொழுது சிறந்த பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரத் திட்டத்தை அமுற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால் மக்களால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதை ஐக்கிய தேசியக் கட்சியும்புரிந்து கொள்ளவில்லை. “பசியில் இருக்கிறவனுக்கு புத்த தர்மம் போதிப்பது பலன் கிடையாது'' இதுவே புத்தரின் சிந்தனை. “முதலில் அவனின் பசியைப் போக்குங்கள் பிறகு தர்மத்தைப் போதியுங்கள்.” நாட்டில் வாழும் ஏழை மக்களின் பிரச்சினைகளை முறையாகத் தீர்க்கமுடியாத படியால் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவிக் கொண்டது. இப்பொழுது இதைப் புரிந்து கொண்டு மீண்டும் தவறுகளை உண்டு பண்ணாமல் நாட்டின் வறிய மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்லதொரு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்து நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேணடும். அதை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அமுற்படுத்த முடியும், மக்கள் சகல அரசியல் வாதிகளையும் பற்றித் தப்பான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளபடியால் அரசியல்வாதிகள் மேலும மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சி செய்தால் ஏமாறுவது அரசியல் வாதிகளே! இது கடந்த கால அரசியல் வரலாறு.

லங்காதீப சிங்கள நாளிதழில்
ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க
மொழியாக்கம்
அ.சக்திவேல்

# பனிச்சங்கேணித் தாக்குதல் ஆதாரங்களுடன் கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் முறையீடு

### கொழும்பிலிருந்து மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் தகவல்

மட்டக்களப்பு பனிச்சங்கேணியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்கக் காவலரண் மீது இலக்குவைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி தாக்குதல் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்தே நடத்தப்பட்டுள்ளது என்பதை, ஆதாரங்களுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளதாக, மட்டக்களப்பு, அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அரசியல் துறையினர் இதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரிவித்துள்ளதாக, அவர் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புலிகளின் குரல் வானொலிக்குத் தெரிவித்தார். இத்தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளை துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகவும் கௌசல்யன் தெரிவித்தார். இது சிறிலங்கா இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட தாக்குதல் என்பது தெளிவாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தே.முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் மீது அக்கரைப்பற்றில் துப்பாக்கிப் பிரயோகம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரொருவர் நேற்று முன்தினமிரவு முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றினால் சுடப்பட்டு, காயங்களுடன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

27 வயதுடைய அப்துல் ரசாக் மொகமது அஸ்லாம் என்ற இந்த நபர் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சருமான ஏ.எல். அதாவுல்லாவின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சர் அதாவுல்லாவின் கிழக்கு விஜயம் தொடர்பாக சுவரொட்டிகளைக் குறிப்பிட்ட நபர் ஒட்டிக் கொண்டிருக்கையில், இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தேசிய முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களினால் பண்டா குழுவைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் இவர் மீதான துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அரசியல் பின்னணிகளே காரணம் என அப்பிரதேச மக்கள் கருதுகின்றார்கள்.

-இடைக்கால நி.சபை யோசனைக்கு முன்பு-

# இறுதித் தீர்வுக்கான பேச்சை நடத்தாது விட்டால் அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டி வரும்

### சிங்கள தேசாபிமான இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளின் போது இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கு முன்பு இறுதித் தீர்விற்கான பேச்சை நடத்தாது விட்டால் இந்த அரசாங்கத்தையும் கவிழ்க்க நேரிடும் என சிறிலங்கா தேசாபிமான இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் கூறியுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அவ்வமைப்பின் விசேட கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"சந்திரிகா அரசு பதவிக்கு வந்து இவ்வளவு நாளாகியும் விடுதலைப்புலிகளுடனான பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது.

கடந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்பவே சந்திரிகா அரசு செயற்படுகிறது. இடைக்கால நிர்வாக சபை வழங்க முன்பு இறுதித்தீர்வு பற்றிப் பேச வேண்டும். அவ்வாறு போசாது விட்டால், இந்த அரசும் கவிழும். நாம் இந்த அரசை பதவியமர்த்தியது முன்னைய காலங்களில் நடத்தப்பட்ட கூத்துக்களுக்காக வல்ல" எனக் கூறியுள்ளார்.

"இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டை அது இருந்த நிலையில் இருந்து மீட்டெடுக்கவென மிகச் சிறு குழுவாகத் தோன்றிய தமது அமைப்பு இன்று நாடெங்கும் வியாபித்துள்ளது. அதன் நடவடிக்கையால் பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நாட்டில் இன்று பல்வேறு அமைப்புக்கள் காணப்பட்டாலும், தேசாபிமான இயக்கமே நல்ல சேவையாற்றி வருகின்றது. கொழும்பிலும் போக்குவரத்துக்களிலும் பல கூடாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

வேறு நாடுகளைப் போன்று பல்வேறு பிரிவினைகள் எமது நாட்டில் கிடையாது. அநேகமானோர இதனை புரிந்துகொள் ளாமல் உள்ளனர்.

இடைக்கால சபை வழங்குவதற்கு நாம் ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம். ஏனைய மகா ச்ங்கத்தினரையும் நாம் இதற்கு இணங்க வேண்டாம் எனக் கேட்டுள்ளோம்.

நாம் எந்தக் கட்சியுடனும் சார்ந்திருக்கவில்லை. எமது அமைப்பு தனியான ஒன்று. கடந்த காலங்களில் ரணில் ஏற்படுத்திய உடன்பாடுகளுக்கேற்ப அதே வழியில் சந்திரிகா அரசும் செல்லாது, இதனை ஒரு சவாலாக ஏற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# அ.அட்டை கட்டாயப்படுத்தல் சட்டமூலம் வரும் 7 ஆம் திகதி பாராளுமன்றில்

(கொழும்பு)

தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயப்படுத்தல் சட்டமூலம் எதிர்வரும் 7ஆம்திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அத்துடன் இதற்கு ஆதரவளிப்பதா? விடுவதா? என்பது தொடர்பான ஹெல உறுமயவின் இறுதி முடிவு 4ஆம் திகதி தெரியவரும்.எனினும் இந்தச் சட்டமூலம் நாட்டுக்குப் பொருத்தமானது என்றே ஹெல உறுமய எண்ணியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## துயர் பகிர்கின்றோம்

### அமரர் இரா.தியாகலிங்கம்

எமது அன்புக்கும், மதிப்புக்குமுரிய அமரர் இரா.தியாகலிங்கம் அவர்கள் 28.09.2004 அன்று உயிர் நீத்த சோகச் செய்தி கேட்டு அன்னாரின் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அருட்சகோதரன் ஜோன்
செ.புவனகுகராஜ் &
திருச்சபை மக்கள்
மெதடிஸ்த திருச்சபை,
உருத்திரபுரம்.

(4921)


# சேது சமுத்திரத்திட்டத்தால் தமிழருக்கு நன்மையில்லை

### கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவிப்பு

சேது சமுத்திரத்திட்டம் அமுலாக்கப்படுவதனால் தற்போதைய சூழலில் அது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையையும் அளிக்கப் போவதில்லை என்று யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. சூசை ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சேது சமுத்திரத்திட்டம் தொடர்பான கருத்தாடல் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வு எட்டப்படும் வரைக்கும் இந்தத் திட்டம் அமுலாக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். நிகழ்வில் .கே.ரி.கணேசலிங்கம் உட்பட பலர் கருத்துரைத்தனர்.

இதேவேளை சேதுசமுத்திரத் திட்டம் இந்த ஆண்டே தொடங்கப்படும்; அதற்கான அடிக்கல் நாட்டப்படும் என்று இந்தியக்கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரி.ஆர்.பாலு கூறியுள்ளார்.

நாகர் கோவிலில் மத்தியரசின் வரவு, செலவுத் திட்ட அறிக்கை குறித்து நேற்று முன்தினம் விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் கொண்டு வருவதற்கு நாங்கள் தான் காரணம் என்று ஒவ்வொருவரும் கூறுகிறார்கள். அவர்க ளுக்கு எனது பாரட்டுக்கள்.ஆனால் காங்கிரஸ் ஆட்சியில் தான் சேது சமுத்திரத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டது, திட்டம் முழுமை பெறவுள்ளது என்பதை அவர்கள் மறக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன் என அவர் மேலும் கூறியுள்ளார்.


## ஓராம் ஆண்டில் நீங்காத நினைவுகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 |  | 11 |
| - | | - |
| 08 | | 10 |
| - | | - |
| 1940 | | 2003 |

### இராசையா - யோகேஸ்வரன் (P.M)

எம் அருமைத்தெய்வமே!
நீவிர் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு ஆனாலும்,
எம் நினைவை விட்டுப் பிரியவில்லை.
ஊரென்ன, தேசமென்ன இன்னும் பிரியவில்லை;
என்றுமே பிரிய முடியாதாகிவிட்டீர்.
காலன் இன்னுமா பொறுத்திருக்க மறுத்தான்
உன்னுயிர் ஏய்த்து விட.
இல்லை இல்லை உங்கள் சேவைகள்
என்றுமே மறந்திட, மறைக்க முடியாதவை.
உங்களது பணிகள் என்றுமே
எட்டுத் தலைமுறைக்கும் நீடிக்கும்.
உங்களது உறவினர், நண்பர்கள், உற்றார்
எப்போதுமே தம் நினைவில்
என்றென்றும் நினைவிழக்கார்.

7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-10501)


—புலிகளின் தலையீட்டால்—

# முஸ்லிம் விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் ஒப்படைப்பு

அக்கரைப்பற்று வட்டமடு பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர்களினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் இரண்டு .விடுதலைப் புலிகளின் தலையீட்டையடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வட்டமடு பிரதேசத்தில் விவசாயம் செய்யச் சென்ற எம்.எல். தம்பிலெப்பை மற்றும் எஸ் எல்.செய்னுலாப்டீன் ஆகியோரின் உழவு இயந்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அப் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போர்களினால் தடுத்து வைக்கப்பட்டன. குறிப்பிட்ட விவ ாயிகள் விவசாயம் செய்யும் காஷ ரி கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரை என கால்நடை வளர்ப்போர் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுக்கும், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் சம்மேளன பிரதிநிதிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. விடுதலைப் புலிகளின் தலையீட்டையடுத்து குறிப்பிட்ட இரண்டு உழவு இயந்திரங்களும் நேற்று முன்தினம் திருக்கோவில் பொலிசார் ஊடாக உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுத்துண்டுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316 (சி-10419)

# இந்திய அரசின் திட்டக்குழுவில் வெளிநாட்டினர்; இடதுசாரிகள் எதிர்ப்பால் மாற்றங்கள் ஏற்படலாம்

## -சோனியாவும் பிரதமருடன் ஆலோசனை

(புதுடில்லி)

**இந்திய மத்திய அரசின் திட்டக்குழுவில் வெளிநாட்டு நிபுணர்களை உள்வாங்கும் விடயத்தில் பெரும் சர்ச்சைகள் தோன்றியுள்ளன. இடதுசாரிகளின் எதிர்ப்புக்களையடுத்து விரைவில் தீர்வு காணத் தீவிர நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.**

திட்டக்குழுவில் இருந்து வெளிநாட்டினர் நீக்கமா? என்ற கேள்விக்கு இரண்டு நாட்களில் முடிவு அறிவிக்கப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார். திட்டக் குழுவில் வெளிநாட்டு நிபுணர்கள் இடம்பெறக் கூடாது என்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பிறகு உலகவங்கி, சர்வதேச நிதிநிறுவனங்களுடன் தொடர்புள்ள நிபுணர்கள் திட்டக்குழுவில் இடம் பெறுவதற்குத்தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாக கம்யூனிஸ்ட் தலைவர்கள் விளக்கமளித்தனர்.

இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டு நிபுணர்கள் தான் திட்டக்குழுவில் இடம் பெறுவார்கள் என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் முன்னர் கூறியிருந்தார். பிரதமர் மன்மோகன் சிங்குடன் வெளிநாடு சென்றிருந்த திட்டக் குழு துணைத்தலைவர் மாண்டேக் அலுவாலியா திங்களன்று டில்லி திரும்பினார். நேற்று முன்தினம் அவர் திட்டக்குழு உறுப்பினருடன் ஆலோசனை நடத்தினார். அதில் திட்டக்குழு இணையமைச்சர் எம்.வி.ராஜசேகரன் கலந்துகொண்டார்.

கூட்டம் முடிந்ததும் மாண்டேக் அலுவாலியா நிருபர்களிடம் கூறியதாவது: வெளிநாட்டு நிபுணர்கள் பிரச்சினை இன்னும் இரண்டு நாட்களில் தீர்க்கப்படும். குழுவில் வெளிநாட்டு நிபுணர்களுக்கு இடமளிப்பதா? வேண்டாமா? என்பது பற்றிய குழுவின் கருத்தைப் பிரதமரிடம் தெரிவிப்பேன். என அவர் முடிவு செய்வார்.

இதற்கிடையில் திட்டக்குழுவில் வெளிநாட்டு நிபுணர்கள் இடம்பெறும் பிரச்சினை பற்றி பிரதமர் மன்மோகன்சிங்கின் பதிலை எதிர்பார்த்திருக்கிறோம் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் தலைவர் சீத்தாராம் எச்சூரி கூறினார். இது இவ்வாறிருக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து 40 நிமிடம் பேசினார். அமெரிக்க சுற்றுப் பயணம் முடிந்து திரும்பிய பிறகு பிரதமரைச் சோனியா சந்திப்பது இதுவே முதற் தடவை.

திட்டக்குழுவில் வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் அந்நிய முதலீடு அதிகரிப்புப் பிரச்சினைக்கு இடதுசாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

# தமிழக உள்ளாட்சி இடைத்தேர்தல் முடிவு; அதிக இடங்களில் தி.மு.க.கூட்டணி வெற்றி!

(சென்னை)

தமிழகத்தில் நடந்த உள்ளாட்சி பதவிகளுக்கான தேர்தலில் அதிக இடங்களில் தி.மு.க கூட்டணி வெற்றிபெற்றுள்ளது. தமிழகத்தில் காலியாக இருந்த 1121 உள்ளாட்சிப் பதவிகளுக்கு திங்கட்கிழமை தேர்தல் நடந்தது. திருமங்கலம்- இராமநாதபுரம் நகராட்சித் தலைவர் மூன்று மாவட்ட ஊராட்சிச்சபை உறுப்பினர், 54 ஊராட்சி ஒன்றிய சபை உறுப்பினர், 946 சிற்றூராட்சிச் சபை உறுப்பினர், 16 நகராட்சி சபை உறுப்பினர் பதவிகளுக்குத் தேர்தல் நடந்தது. நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு வாக்கு எண்ணத்தொடங்கி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்த இடைத்தேர்தலில் வாக்குப்பதிவன்று, வரலாறு காணாத அளவில் அ.தி.மு.க வினர் வன்முறையில் ஈடுபட்டனர். பொலிஸ் துணையுடன் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி சரமாரியாகக் கள்ள ஓட்டுக்களைப் போட்டனர் இவ்வளவு அராஜகத் தையும் மீறி தி.மு.க கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களே அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

# மராட்டிய மாநில சட்டசபைத் தேர்தல் காங்கிரஸ் – தேசியவாத காங்கிரஸ் கூட்டணி

## -சோனியா ஒக்ரோபர் 04 இல் பிரச்சாரம்

(புதுடில்லி)

மராட்டிய மாநில சட்டசபைத் தேர்தல் அடுத்த ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி நடக்க இருக்கிறது.. காங்கிரஸ்-தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுகிறது.மொத்தமுள்ள 288 இடங்களில் 154 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியும் மீதி உள்ள தொகுதிகளில் தேசியவாத காங்கிரசும் போட்டியிடுகிறது.

ஒக்ரோபர் 04 ஆம்திகதி சோனியாகாந்தி மராட்டிய மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். இரண்டு அல்லது மூன்று கட்டமாக அதிக பொதுக்கூட்டங்களில் சோனியாகாந்தி பேசுவார் என்றும், சில கூட்டங்களில் சரத்பவாரும் சேர்ந்து ஒரே மேடையில் பேசுவார்கள் என்றும் கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது. முன்னதாக நாளை அருணாசலப் பிரதேசத்தில் சோனியா காந்தி ஒரு நாள் மட்டும்தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் சார்பில் ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் விழாவில் சோனியாகாந்தி இன்று கலந்துகொள்கிறார். அங்கிருந்து விமானம் மூலம் அருணாச்சலப் பிரதேசத்திற்கு அவர் செல்கிறார்.

# காஷ்மீர் கூரியத் மாநாட்டு கட்சியுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு இணக்கம்

(புதுடில்லி)

கூரியத் மாநாட்டுக் கட்சியுடன் எந்தவித முன் நிபந்தனையுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று மத்தியரசு அறிவித்துள்ளது.

இது குறித்து உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் நிருபர்களிடம் நேற்று முன்தினம் கூறுகையில்:

ஒக்ரோபர் 23ஆம் திகதி காஷ்மீர் செல்கின்றேன். அப்போது பேச்சு நடத்த வருமாறு கூரியத் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்படும்.

கூரியத் மாநாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக மத்தியரசு கருதுகின்றது. அதனால் தான் எந்தவித முன் நிபந்தனையுமின்றிப் பேச்சு நடத்துவோம் என்று அறிவித்துள்ளோம்.

குறிப்பிட்ட பிரச்சினைகளை மட்டுமே விவாதிப்போம். ஏனைய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மாட்டோம் என்று எந்தப் பிரச்சினைகளையும் ஒதுக்க மாட்டோம்.

அதனால் தான் நிபந்தனையற்ற பேச்சு நடத்துவோம் என்று அறிவித்துள்ளோம்.

பேச்சு நடத்துவதன் முக்கிய நோக்கமே காஷ்மீரில் அமைதி நிலவ வேண்டும். அது தொடர்பான ஒப்பந்தம் கூரியத் அமைப்புடன் ஏற்பட வேண்டுமென்பது தான்.

அவர்களது பிரச்சினைகளை அவர்களே கூறட்டும். எங்களது பிரச்சினைகளை நாங்கள் கூறுவோம். அதன் பின்னர் பிரச்சினைகளுக்குப் பேசித் தீர்வு காண்போம் என்று அவர் கூறியுள்ளார்.

# தீவிரவாதத்தை எதிர்கொள்ள ஏதாவதொரு சட்டம் தேவை

## - முன்னாள் இந்தியப் பிரதமர் வலியுறுத்து

(புதுடில்லி)

தீவிரவாதத்தை ஒழிக்கவும் எதிர்கொள்ளவும் ஏதாவது ஒரு சட்டம் தேவைப்படுகின்றது என்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கூறியுள்ளார்.

பொடோ சட்டத்திற்கு மாற்றாகப் புதிதாகச் சட்டம் கொண்டு வர மத்தியரசு திட்டமிட்டுள்ளது குறித்து வி.பி.சிங் கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராட ஆதரவு உள்ளது. ஆனால் அதே சமயம் இம் மாதிரியான சட்டங்களால் சாதாரண மக்கள் கைது செய்யப்படக்கூடாது. அதனைத் தவிர்த்துப் பார்த்தால் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஆதரிக்கப்படவேண்டியவை என்றும் அவர் கூறியுள்ளார்.


# சாவு அறிவித்தல்

## திருமதி.கந்தையா காளியம்மா

கொழும்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கந்தையா காளியம்மா 28.09.2004 (செவ்வாய்) அன்று தருமபுரம் கட்டைக்காட்டில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற கந்தையா (பழனி) அவர்களின் அன்பு மனைவியும், குருநாதன், காலம் சென்றவரான வள்ளியம்மை, பாவா, சுப்பிரமணியம் (சுவிஸ்), இராசமணி, செல்லம்மா, துரைராசா (சித்தப்பா), சுப்பையா, பரமேஸ்வரி, இராசகோபால் ஆகியோரின் பாசமிகு தாயாரும் டோகாவைச் சேர்ந்த சிறிதாஸ் அவர்களின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.09.2004 வியாழக்கிழமை தருமபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மகன் துரைராசா (சித்தப்பா)
(5138) தருமபுரம்.

# 06ஆம் ஆண்டு நினைவு அலை



**மேஜர் துளசி**
(வவுனியாமாவட்ட புலனாய்வுத் துறைப்பொறுப்பாளர்)
இராசரத்தினம் விஜயகு

பிறப்பு 1970 . 04 . 29
வீரச்சாவு 1998 . 09 . 30

நா ஐந்து வயதினிலே -நம்
தலைவன் அணியில் இணைந்தாய்
அண்ணா - நீ.
பள்ளிப்படிப்பினையே பாதியில்
நிறுத்திப் பாதகரைப் பதம் பார்க்கவெனப் பாதையை மாற்றினாய்
அண்ணா - நீ.
உன் செல்லச்சிரிப்பும்,
கம்பீர நடையும் எம் கண் முன் நித்தமும் நிழலாடுதண்ணா.
எம் மண்ணுக்கும், மக்களுக்கும்
நீ ஆற்றிய சேவையால்,
உனைக் காணத் துடிக்குதண்ணா.
உள்ளம்.
எங்கண்ணா சென்றாய்
எமைப்பிரிந்து?
எட்டு வருசம் ஆற்றினாய்
சேவை - நீ எட்டப்பன்
கூட்டத்தால் பற்றினாய் சாவை
ஆறு வருடம் ஆயினும்
ஆறாதய்யா உன் துயர்.
மீளாதய்யா எம் சோகம்

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்கா,
தம்பிமார், உறவினர்கள்,
போராளிகள்,

துளசி புகைப்படக் கலையகம்,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
(5131)





கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கராத்தே பயிற்சி பட்டறை முதல் நாள் நிகழ்வில். (படங்கள் : (லோ, தீ)

# கராத்தே கலையின் நுட்பங்கள் பயிற்சி பட்டறை நூற்றுக்கணக்கான வீரவீராங்கனைகள் பங்கேற்பு

## சர்வதேச கராத்தே தொடர்பாளர் வழங்கினார்



ஜப்பான் நாட்டைச் சேர்ந்த எட்டாவது டான் சென்சி மசோ கவாசோ அவர்களின் சர்வதேச கராத்தே தொடர்பாளர் சென்சி லிசிமித் அவர்கள் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான கராத்தே வீரவீராங்கனைகளுக்கு கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் கராத்தே கலையின் நுட்பங்கள் பற்றிய பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தினார்.

நேற்று மாலை மூன்று மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுஈகச் சுடரினை தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி மற்றும் சர்வதேச கராத்தே தொடர்பாளர் சென்சிலி சிமித் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றி வைத்தார். விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரைகளை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா, தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் திரு. ரட்ணசோதி, சர்வதேச கராத்தே தொடர்பாளர் சென்சி லிசிமித் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களில் இருந்தும் வருகை தந்த நூற்றுக் கணக்கான கராத்தே வீரவீராங்கனைகளுக்கு கராத்தேக் கலை பற்றியும், அதன் முக்கியம் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டு கராத்தே நுட்பங்கள் பற்றிப் பயிற்சி மூலம் விளக்கமளிக்கப்பட்டது. சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக பயிற்சி நடைபெற்றது. இவ்வாறு நடைபெற்ற பயிற்சிகள் மிகவும் முக்கியமானதாகவும், பிரயோசனமானதாகவும் இருந்தது எனவும் பயிற்சியில் ஈடுபட்ட கராத்தே மாணவர்கள் தெரிவித்தனர்.

இத்தகைய பயிற்சிகள் மூலம் தமிழீழத்தின் கராத்தே வீரர்கள் சர்வதேச ரீதியில் தம்மை இணைத்துக் கொள்வதற்கும், ஈடுபாட்டை ஏற்படுத்தவும் வழிவகுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பயிற்சிகள் இன்றும் நடைபெறும் எனத் தமிழீழ கராத்தேச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற கராத்தே பயிற்சியில் ஆண், பெண் வீரர்கள் வயது வேறுபாடின்றி நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (லோ, தீ)

## பயிற்சி முகாம்

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றமும் தமிழீழ விளையாட்டுத்துறையும் இணைந்து கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர். தருமபுரம் மகாவித்தியாலயத்தில் வரும் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் இதுவரைபதிவு செய்தவர்கள் அனைவரும் வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.00மணிக்கு தருமபுரம் மகாவித்தியாலய மைதானத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (லோ, தீ)

# ஐ. சி. சி. மினி உலகக்கிண்ண வெற்றி

# இயற்கையால் பாதிக்கப்பட்டோருக்கு காணிக்கை

இங்கிலாந்தில் கிடைத்த வெற்றியை சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுப் பகுதியில் தாக்கிய சூறாவளியால் பாதிக்கப்பட்டோருக்கு காணிக்கையாக்குவதாக அணித்தலைவர் பிரைன் லாறா தெரிவித்துள்ளார்.

பரிசுக் கோப்பையுடன் தாயகம் திரும்பிய மேற்கிந்தியத் தீவு அணி வீரர்களுக்கு விமானநிலையத்தில் ரசிகர்கள் உற்சாகமான வரவேற்புக் கொடுத்தனர். முன்னாள் மேற்கிந்தியத்தீவு அணித்தலைவர் சோபர்ஸ் உள்ளிட்டோரும் வீரர்களுக்கு வரவேற்புக் கொடுத்தனர். இதன் பின்னர் மேற்கிந்தியத்தீவு அணித்தலைவர் லாறா நிருபர்களிடம் கூறுகையில்; சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுப் பகுதியில் தாக்கிய சூறாவளியால் மிகப் பெரிய அளவில் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் கிடைத்த வெற்றியை அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன். இறுதிப் போட்டிக்கு முன்தினம் என்னை ஒரு பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்போது அவர் இங்கு என்னுடைய வீடு முழுவதுமாக சேதம் அடைந்து விட்டது. நாளை நடக்கவிருக்கும் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றால் அனைத்துச் சோகங்களையும் அது மறைத்து விடும். மேற்கிந்தியத்தீவு வெற்றிபெற்றால் இந்த உலகின் சந்தோசமான பெண் நானாகத்தான் இருக்க முடியும் என்று கூறினார். அவரின் அந்த வார்த்தை என்னை மிகவும் பாதித்தது. இதற்காகவே வெற்றி பெறவேண்டும் என்று துடித்தேன். வீரர்கள் அந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர் என்றார்.






# இந்தியாவுடன் இந்தியாவில் விளையாட மிகவும் ஆவலாகவுள்ளோம்-இன்சமாம்



இந்தியாவுடன் இந்தியாவில் விளையாடுவதற்கு மிகவும் ஆவலாக உள்ளோம் என பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

நான் மட்டுமல்ல அணிவீரர்கள் அனைவருமே இந்தியாவுடனான சுற்றுப் பயணத்தை மிகவும் எதிர்பார்த்துள்ளனர் என சர்வதேச செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக கடைசியாக கடந்த மார்ச்-ஏப்பிரலில் எமது நாட்டில் விளையாடியதைக் காட்டிலும் சிறந்த ஆட்டத்தை சமீபகாலமாக வெளிப்படுத்தி வருகிறோம். ஆதலால் இந்தியாவுடனான தொடரிலும் மேலான ஆட்டத்தையே ஆடுவோம் என நம்புகிறேன்.

இந்தியா, பாகிஸ்தான் ஆட்டத்தை உலக ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.அதனால் கிரிக்கெட் ஆட்டமும் மேம்பாடு அடைந்து கொண்டே செல்கிறது. அதே சமயம் இந்தியாவுடன் விளையாடும் போது ஆட்டத்திறன் மிகவும் வலுவடைகிறது என்றார் இன்சமாம் உல் ஹக்.

# இந்தியாவின் அஞ்சு ஜோர்ஜுக்கு தங்கம்

சிங்கப்பூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆசிய தடகள சம்பியன் போட்டியில் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் அஞ்சு பாபி ஜோர்ஜ் தங்கப் பதக்கம் வென்றார். அஞ்சு 6.66 மீற்றர் நீளம் தாண்டினார். கஜகஸ்தானின் எலிஆனா கோச்சியேவா 6.41 மீற்றர் தாண்டி இரண்டாமிடம் பிடித்தார். மூன்றாமிடத்தை பிலிப்பைன்சின் மரெஸ்டெல்லா டோரஸ் வென்றார். இப்போட்டியில் பங்கேற்கும்போது விடுமுறை கால மனோபாவத்தில் இருந்ததாக அஞ்சு தெரிவித்தார். "நான் மிகப் பெரிய போட்டியில் வெற்றி பெற விரும்புகிறேன்" என்றார். ஹெலகின்சி உலக சம்பியன் பட்டப் போட்டிகளைக் குறிப்பிடும் விதமாக அவர் இவ்வாறு கூறினார்.

# சிம்பாப்வே சுற்றுலா இங்கிலாந்து அணியிலிருந்து முன்னணி ஆட்டக்காரர்கள் பலர் விலகல்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி அ[illegible]மாதம் சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் பயணத்திலிருந்து முன்னணி இங்கிலாந்து வீரர்கள் பலரும் விலக முடிவு செய்திருக்கிறார்கள்.

வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவ்ஹார்மிசன் ஏற்கனவே அணியில் இருந்து விலகி விட்டார். இதற்கிடையே பிளின்டொப், கில்ஸ் மற்றும் டிரெஸ்கொதிக் ஆகியோர்களும் அணியில் இருந்து விலக முடிவு செய்திருக்கிறார்கள். முன்னணி வீரர்கள் பலரும் விலகிவருவதால் இளம் வீரர்களுக்கு சிம்பாப்வே பயணத்தின் போது வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. சிம்பாப்வே நாட்டில் அரசியல் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் முன்னணி ஆட்டக்காரர்கள் இந்த முடிவு எடுத்திருக்கிறார்கள். சிம்பாப்வே அணியில் முன்னணி வீரர்கள் பலரும் நீக்கப்பட்டு விட்டனர். இதனால் தாய்பு தலைமையிலான இளம் ஆட்டக்காரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஷேன்வோர்ன் விசுவரூபம் எடுப்பார்

## பயிற்சியாளர் புச்சன்னன்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் விசுவரூபம் எடுப்பார் என்று பயிற்சியாளர் ஜோன்புச்சன்னன் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

4டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடு வதற்காக அவுஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக பந்து வீசுவார் என்று அந்த அணியின் பயிற்சியாளர் ஜோன்புச்சன்னன் கூறியுள்ளார்.

2001ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு வந்தபோது வோர்னுக்கு அதிகளவில் நெருக்கடி இருந்தது. சிறப்பாகப் பந்து வீசி விக்கெட்டைக் கைப்பற்றவும் வேண்டும். அதே நேரத்தில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுக்காமலும் இருக்கவேண்டும் என்ற நிலையிருந்தது. ஆனால் தற்போது அந்த நிலையில்லை. ஏனெனில் அவுஸ்திரேலிய அணியில் பல முன்னணிப் பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பதுதான் அதற்குக்காரணம் ஆகும்.

எனவே இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வோர்ன் எந்த விதமான நெருக்கடியும் இன்றி விசுவரூபம் எடுத்து பந்து வீசுவதுடன் அதிகளவில் விக்கெட்டுக்களையும் கைப்பற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# முக்கோண ஒரு நாள் தொடர் இன்று பாகிஸ்தானில் ஆரம்பம்

மூன்று நாடுகள் பங்குபற்றும் முக்கோண ஒரு நாள் தொடர் இன்று பாகிஸ்தானில் ஆரம்பமாகின்றது. முதல் போட்டியில் பாகிஸ்தான் சிம்பாப்வே அணியை எதிர்த்தாடுகின்றது. பாகிஸ்தான், சிம்பாப்வே, சிறிலங்கா அணிகள் கலந்துகொள்ளும் இப்போட்டித் தொடரில் சிறிலங்கா அணி வரும் 6ஆம் திகதி முதலாவது போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

## சிந்தனைக்கு



எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தான் எங்களுடைய வெற்றியே தங்கியிருக்கின்றது. அசுர பலம்கொண்ட "கோலியாத்"தை ஒரு சிறுவன் வெற்றிகொண்டது இவ்விதம்தான்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 30-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## தேசிய சமாதான ஆலோசனைக் குழு?

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டாலும் சரி, கலந்து கொள்ளாது போனாலும் சரி திட்டமிட்டவாறு தேசிய சமாதான ஆலோசனைக்குழுவைக் கூட்டுவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது அரசாங்கத்தின் இம்முடிவானது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த எதிர்த்தரப்பு அவசியமான தொன்றல்ல என்பது போன்றதாகவே உள்ளது.

தேசிய சமாதான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் அரசியற்கட்சிகள், மதத்தலைவர் மற்றும் சமூகத் தலைவர்களை ஒன்று திரட்டி இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எட்டக்கூடியதானதொரு யோசனையை/திட்டத்தை முன்வைப்பதே ஆகும். ஆனால் எதிர்க் கட்சிகள் வந்தாலும் என்ன விட்டாலும் என்ன தேசிய சமாதான ஆணைக்குழு கூடும் என்ற அரசின் நிலைப்படானது அக்குழு அமைப்பதற்குக் கூறிக்கொண்ட காரணத்தையே கேள்விக்குரியதாக்கி விடக் கூடியதாகும்.

தற்போதைய தகவல்களின்படி இத் தேசிய சமாதான ஆலோசனைக் குழுவிற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவம் செய்யும் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் மலையக மக்கள் விடுதலை முன்னணியினர், மேல் மாகாண மக்கள் விடுதலை முன்னணியினர் பங்குபற்றப் போவதில்லை என்று உறுதியாகத் தெரிய வந்துள்ளது. உத்தியோக பூர்வமாக அரசிற்கு இதனை அறிவித்தும் உள்ளனர்.

இந்நிலையில் தேசிய சமாதான ஆலோசனைக் கூட்டத்தில் காணப்படவுள்ள இணக்கம், அன்றித் தயாரிக்கப்படும் திட்டம் யாருடைய தரப்பினதாக இருக்கமுடியும்? அதாவது ஆளும் கூட்டணி தரப்பைச் சார்ந்ததா? அன்றி இலங்கையில் வாழும் பலதரப்பு மக்களைச் சார்ந்ததா? அதாவது தேசியத்தன்மை வாய்ந்ததா?

பிரதான எதிர்க்கட்சியும், தமிழர் தேசியக் கூட்டமைப்பினரும், அவர்களோடு தேசிய சமாதான ஆலோசனைக்குழுவைப் புறக் கணிப்பவர்கள் அனைவரும் தமது புறக்கணிப்பிற்கு தெரிவிக்கும் காரணமானது பேச்சுவார்த்தைக்குரிய அடித்தளம் இடப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கான விடயமும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. இனிக் காலதாமதம் இன்றி பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள், புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகாரப்பகிர்வு அடிப்படையில் பேச்சைத்தொடங்குங்கள் என்பதே.

ஆனால் ஆளும் கூட்டணியும், பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளும் இதனைத் தெரிந்துகொள்வதாக இல்லை. ஐ.தே. கட்சியோ, தமிழர் தரப்போ கோருவது போன்று இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேச்சுக்களை ஆரம்பித்தால், அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடுவோம் என ஜே.வி.பி.யும், அரசாங்கத்தையும் கவிழ்த்து விடுவோம் எனப் பௌத்த – சிங்கள தீவிரவாத அமைப்புக்களும் கூச்சல் இடுகின்றன.

ஆகையினால் இன்று சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது, எதைப் பற்றிப் பேசுவது என்பது குறித்தெல்லாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியதானதொரு நிலையிலேயே ஆளும் கூட்டணி குறிப்பாக சனாதிபதி சந்திரிகா தலைமை வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உள்ளது. இந்நிலையில் எதிர்க்கட்சிகள் எவையும், பங்கேற்காது விட்டாலும் தேசிய சமாதான ஆலோசனைக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவோம் என்ற அரசாங்கத்தரப்பின் நிலைப்பாடானது, பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வர அது முற்படுகின்றதோ என்ற கேள்விகளையே எழுப்புவதாகவுள்ளது.

ஏனெனில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து அரசாங்கம் விரைவில் ஒரு முடிவிற்கு வர வேண்டிய தாகியுள்ளது. இந்நிலையில் ஆளும் கூட்டணிக்குள் இது தொடர்பான இணக்கப்பாடு ஏற்பட்டதாகவில்லை. ஒரு வகையில் பார்த்தால் சுதந்திரக் கட்சியால் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஐ.தே. கட்சியுடன் இணக்கப்பாட்டிற்கு வரினும் ஜே.வி.பி.யுடன் இணக்கப் பாட்டிற்கு வருதல் என்பது சாத்தியப்பட்டு வரமுடியுமா? என்பது போன்றதொரு நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி.யுடனான முரண்பாடுகளுக்கு இத்தேசிய சமாதானக்குழுவில் தீர்வொன்றிற்கு வரலாம். அடுத்ததாக இத்தேசிய சமாதானக்குழுவில் கலந்து கொள்ளவுள்ள தீவிர பௌத்த சிங்கள அடிப்படை வாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலும் தீர்மானங்களை மேற்கொள்ளலாம். ஒரு வகையில் ஜே.வி.பியினருடன் இணக்கப்பாட்டிற்கு வருதல் என்பது இவர்களுடன் (பௌத்த சிங்கள அடிப்படை வாதிகள்) உடன் பாட்டிற்கு வருதல் என்பதற்குச் சமனானதாகவே இருக்கும்.

ஆகையினால் எதிர்க்கட்சியும், தமிழர் தரப்பும் புறக்கணிக்கும் சமாதான ஆலோசனைக்குழுவில் காணப்படும் இணக்கப்பாடானது இனப்பிரச்சினைத் தீர்விற்கான தேசிய இணக்கப்பாடாக இருக்க மாட்டாது, இருக்கவும் முடியாது. மாறாக பௌத்த சிங்களப் பேரின வாதிகள் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முன் வைக்கும் யோசனை யாகவே அது இருக்கும் இவ்யோசனையானது சிலவேளை யுத்த மாகவும் இருக்கமுடியும் ஏனெனில் பௌத்த சிங்கள அடிப்படை வாதிகளும் சமாதானத்தைவிட யுத்தத்தையே யாசிக்கின்றனர்.

# ம.உ. ஆணைக்குழு அதிகாரியைத் தாக்கி சுயரூபத்தை வெளிப்படுத்திய படைகள்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப் பதிகாரி றுவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆலோசகராகப் பணி யாற்றும் ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்டத்தின் அலுவலரான பற்றிக் ஆகியோர் யாழ்.சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் வைத்து சிறிலங்காப் பொலிசாரால் நேற்று முன்தினம் தாக்கப்பட்ட சம்பவ மானது சிறிலங்கா பொலிசாரின தும், சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசி னதும் உண்மையான முகத்தை மீண்டும் ஒரு தடவை கிழித்துக் காட்டியுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கைக் குக் குந்தகமாக இருந்து வரும் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் மனிதாபிமானமாகப் பணியாற்றும் மேற்படி அதிகாரிகளைத் தாக்கிய சம்பவத்தை வன்மையாகக் கண் டிக்கிறோம் எனத் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

அதிலும் குறிப்பாக மேற்படி அதிகாரிகள் யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதி பெற்றுச் சென்ற போதும் அவர்கள் தாக்கப்பட்டமை திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகவே அமைந்துள் ளது. உலகளாவிய ரீதியில் மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் ஐ.நாவின் அலுவலர்கள் மீதான இந்தத் தாக்குதல் சிறிலங்காப் பொலிசாரின் அடக்கு முறையின் உச்சக்கட்டத்தைக் காட்டுகிறது. சிறிலங்கா அரசின் அடக்கு முறை யின் கீழ் வாழ்கின்ற தமிழினம் தனது எதிர்ப்புணர்வை சுதந்திர விடுதலைப் போராட்டத்தின் மூலம் எதிர்த்து நின்று பல வெற்றிகளைக் குவித்து நிற்கின்ற இச் சமயத்தில் தமிழ் மக்கள் அகிம்சை ரீதியாக மேற்கொண்ட பல நிகழ்வுகளை சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் ஆயுத முனையில் அடக்க முற்பட்ட பல நிகழ்வுகள் எம் மண்ணில் நிகழ்ந்துள்ளன.

எம்மக்கள் அத்தனை தடை களையும் உடைத்தெறிந்து எதிர் நீச்சல் போட்டனர். இன்று வரை யாழ் குடாநாடு சிறிலங்கா ஆயுதப்படை களின் அடக்கு முறையில் இருந்து வருவதால் மக்கள் சொல லொண்ணாத் துயரங்களை எதிர் நோக்குகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை சிறிலங்காப் படைகள் பறித்தது மட்டுமல்லாமல் ஐ.நாவின் அலு வலர்கள் கூட இங்கு பணியாற்ற முடியாத அச்சமான ஒரு சூழலை உருவாக்க சிறிலங்கா ஆயுதப் படைகள் முனைகின்றன என்பதை இச் சம்பவம் எடுத்துக் காட்டு கின்றது.

இதன் மூலம் இங்கு நடக்கின்ற சிறிலங்காப்படைகளின் கொடு ரத்தை வெளியுலகிற்கு மறைத்து மீண்டும் ஒரு இன அழிப்பை நடத்த சிறிலங்காப்படைகள் தயாரா கின்றன என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறாயின் சாதாரண மக்க ளின் நிலை என்னவாகும்? என பதை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும். (36)

# மனித உரிமை அதிகாரி தாக்கப்பட்டமை யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் பீதி

## புதிய சன நாயகக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு என்பவை சன நாயக மனித உரிமைகளின் அடிப் படையில் நடைமுறைப் படுத்தப்படு கின்றதா? என்பதற்குப் பதில் தரும் வகையிலேயே மனித உரிமை அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் கருதப்படுவதாகப் புதிய சனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் பொதுச்செயலர் சி.கா செந்திவேல் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். தகுந்த அதி காரம் கொண்ட மனிதஉரிமை அதி காரிகளே யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் சாதாரண பிரஜைகளின் மத்தியில் பீதி நிலையை ஏற்படுத்தி யுள்ளது. இந்த நிலையில் தமக்கு ஏற்படும் மனித உரிமைகள் தொடர் பான பிரச்சினையை எவரிடம் போய் முறையிடுவது என்ற கேள்வி யாழ்ப் பாண மக்கள் மத்தியில் எழுப்பப் பட்டுள்ளதாகவும் செந்திவேல் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (32)

# வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடலுக்கு சனாதிபதியிடம் ஜே.வி.பி கோரல்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவை கட்டுப் படுத்தும் முகமான கலந்துரை யாடல் ஒன்றை ஜே.வி.பி, சனாதி பதியிடம் கோரியுள்ளது. கட்சியின் செயலர் டில்வின் சில்வா சனாதிப திக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன் றில் உலக சந்தையில் எரிபொரு ளின் விலைகள் உயர்ந்தமையே வாழ்க்கைச் செலவு உயர்ந்தமைக் கான காரணம் எனக் குறிப்பிட்டுள் ளார். இலங்கையின் பொருளாதாரம் உலக எரிபொருள் விலையேற் றத்தைத் தாங்கி கொள்ள முடியாத அளவுக்கு ஸ்திரமற்றதாக உள்ளது எனவே இந்த நிலையில் நடை முறை வாழ்க்கைச் செலவை குறைக் கும் வகையில் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில ஆலோசனை களையும் தாம் கோரியுள்ள கலந் துரையாடலின் போது ஆராயலாம் என அவர் சனாதிபதியிடம் தெரி வித்துள்ளார். (32)

# சமாதான முனைப்புகள் தொடர்பில் அரசாங்கத்திடம் இரட்டைக் கருத்து

## நவ சமசமாஜக்கட்சி தெரிவிப்பு

நாட்டில் சமாதானத்தை ஏற் படுத்தும் முனைப்புகளில் அர சாங்கம் இரட்டைக் கருத்தை வெளிப் படுத்தி வருவதாக நவ சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் இதனை வெளியிட்டார்.

சனாதிபதி சமாதானம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டையும், ஜே.வி.பி மாற்றுக்கருத்தையும் வெளிப்படுத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தினார். நாட்டில் இன்று உலக வங்கியின் திட்டங்களுக்கு முகங்கொடுத்து சமாதானத்தை முன்னெடுக்க கூடிய அரசாங்கம் ஒன்றே தற்போது அவசியமானது. இந்த நிலையில் சனாதிபதிக்கோ அல்லது எதிர்கட்சி தலைவருக்கோ நாட்டை இட்டுச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார் (32)

# அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலை ஆசிரி யர்கள் வேலை நிறுத்தப் போராட் டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள் ளனர். அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாக ஏற் பட்டுள்ள பல்வேறு பிரச்சினை களுக்கு அரசாங்கம் உரிய தீர்வுகள் எதனையும் முன்வைக்கத் தவறியுள்ளமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே இந்தப்போராட்டம் நடத்தப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் இந்தப்போராட்டம் நடத்தப்படவிருப்பதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (32)

# செயலாளருக்குத் தெரியாது அமைச்சர்

# கொள்வனவு ஒப்பந்தம் செய்ய முயற்சி!

போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்படாத ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளப் போக்குவரத்து அமைச்சர் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சீனாவிடம் இருந்து 500 பேருந்துகள் அல்லது அவற்றிற்கான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும், ஆனால் இந்த ஒப்பந்தம் குறித்துத் தனக்கு எதுவும் தெரியப் படுத்தப்படவில்லை என்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். 27ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்று சீன நிறுவனத்திடமிருந்து போக்கு வரத்து அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் அமைச்சர் சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்திய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எனினும் இந்த விடயம் குறித்துப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் என்ற வகையில் தன்னுடன் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கலந்துரையாடவில்லைஎனவும்போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜெயவீர ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.கொழும்பு குருத்துறை மற்றும் கொழும்பு கம்பஹா மார்க்க நெடுஞ்சாலைகளில் வேக அதிகரிப்புத் திட்டம் தொடர்பாகவும் 500 பேருந்து கொள்வனவு செய்வது தொடர்பாகவும் போக்குவரத்து அமைச்சர் சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தியதாகச் சீன நிறுவனத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து அமைச்சரிடம் கருத்துக்களைப் பெற முயன்ற போதும் அது சாத்தியமாகவில்லை என்று அந்த நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (32)

## இரா.நடராசனின் 'ஆயிஷா' நூல்

## நேற்று சிறப்புற வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

இரா. நடராசன் அவர்களின் அறிவியல் கண்ணோட்டத்துடன் எழுதிய"ஆயிஷா"ஓர் பள்ளி மாணவியின் கதை நூல் அறிமுகவிழா நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடை பெ




றது. கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை போராளி யோகரட்ணம் யோகி, போராளி தமிழ்கவி, கிளி.ம.வி மாணவி கார்த்திகா, கிளி.சென்திரேசா மாணவி பத்மபிரியா ஆகியோர் ஏற்றிவைத்தனர். நிகழ்வின் வரவேற்புரையினை கிளிநொச்சி மகாவித்தியாலய பிர[தி] அதிபர் பங்கையற்செல்வன் நிகழ்த்தினார். அடுத்து தமிழீழ கல்வி கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள்"ஆயிஷா" நூல்[பிரதி] யினை வெளியிட்டுவைக்க, கண்டாவளைக் கோட்டக் கல்வி அலுவ[லர்] இராஜகுலசிங்கம் பிரதியினைப் பெற்றுக்கொண்டார். ஆய்வுரையி[னை] உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், சேவைக்கால ஆசிரி[ய] ஆலோசகர் கணேசலிங்கம்,தொலைக் கல்வி சிரேஷ்டபோதனாசிரி[யை] மீனா இதயசிவதாஸ் ஆகியோர் வழங்கினர். நன்றியுரையினை [...] சம் ஆசிரியர் கருணாகரன் வழங்கினார்.இந்நூல் வெளியீட்டு நிகழ்[வில்] அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் எனப் பெரு[ம்திரளா] வானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

### தியாகி திலீபன் மருத்துவ சேவையினரால்

## 2ஆம் லெப் மாலதி நினைவாக விசேட மருத்துவப் பரிசோதனை

02ஆம் லெப்டினன்ட் மாலதி நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு தியாகதீபம் மருத்துவர்களால் சிறப்பு மருத்துவப் பாசறை நடத்தப்படவுள்ளது. நாளைமுதல் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம் மருத்துவப்பாசறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி, மருத்துவர்கள் பங்கெடுக்கவுள்ளனர். அத்துடன் மருத்துவம், குடும்பநலன், சுகாதாரம் போன்றவை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், நடத்தப்படவுள்ளது.

நாளை வவுனியா பூந்தோட்டம்இடம்பெயர்ந்தோர் முகாமில் வவுனியா மாவட்ட மகளிர் பொறுப்பாளர் அலையின் ஏற்பாட்டிலும் 2ஆம் திகதி பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி தியாக தீபம் மருத்துவர், செல்வி நளாவின் ஏற்பாட்டில்,வாடியடி மகாவித்தியாலயத்திலும், 3ஆம் திகதி நெடுங்கேணிப் பிரதேசத்தில் வவுனியா வடக்கு மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனாவின் ஏற்பாட்டிலும் நடைபெறவுள்ளது. நாளை பூந்தோட்டத்தில் பொது மருத்துவம், கண்மருத்துவம், ஆய்வுகூடப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும்.

2ஆம் 3ஆம் திகதிகளில் பொது மருத்துவம், கண்மருத்துவம், பற்சிகிச்சை ஆய்வுகூடப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும். அந்தந்தப் பிரதேச மக்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

### அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய 1ஆம்,2ஆம்,3ஆம், 4ஆம், அணி மாணவர்களின் வேலை வாய்ப்பு நியமனங்கள் தொடர்பான அவசர கலந்துரையாடல் யாழ். பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற இருப்பதால் கல்வித்தகைமை சான்றிதழ், டிப்ளோமா பட்டச் சான்றிதழ் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளுடன் சமூகம் தருமாறு கேட்கப் படுகின்றனார். தவறும் பட்சத்தில் அவர்களின்நியமனங்களுக்குத் தமதுசங்கம் எந்தநடவடிக்கைகளும் எடுக்கமாட்டது என மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

### மாணவிகள்...

அங்க சேட்டை புரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக பெற்றோர் களாலோ அல்லது மாணவிகளாலோ பொலிசில முறைபாடு செய்யவில்லை. ஆனாலும் இந்தச் சம்பவம் தொடர்பாக சிங்கள பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானதன் பின்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சேவை வவுனியா பொலிஸ் டி.ஐ.ஜிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்[கு]ம் கேட்டு இருந்தது இதற்கு அமைவாக சட்டமா அதிபரின் பரிந்து[ரையின்] பேரில் தண்டனை சட்ட கோவை 345 இன் கீழ் தனித்தனியாக

ஆண்டு சித்திரை மாதம் வவுனியா நீதவான் நீதிமன்றில் [வவு]னியா பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றது. வழக்கின் போது பாடசாலை அதிபர், மாணவிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள் என்போர் சாட்சியம் வழங்கி இருந்தனர். இதற்கிடையில் மாணவிகளும் பாடசாலை அதிபரும் வேறு பாடசாலைகளுக்குச் சென்று இருந்தனர். வழக்கு விசாரனைகள் இடம் பெற்றது. கல்வி திணைக்கள அதிகாரிகள் மாலைநேர வகுப்பு வைப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்கவில்லை என்றும் சாட்சியம் அளித்திருந்தனர். பாடசாலை அதிபர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமானது பொய்யானது என்றும், அரசியல் பின்னணி கொண்டது என்றும் தெரிவித்திருந்தார் வழக்கு விசாரனை எடுத்துக்கொள்ளப்பட்டு இந்தியாவில் இவ்வாறான வழக்குகளில் வெவ்வேறு நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை மேற்கோல் காட்டி 18 மாதகாலச் சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் வழங்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். (18)

### பாதுகாப்பு...

பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் கூறியுள்ளார். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சனநாயக ரீதியாகச் செயற்படும் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினால் தொடர்ந்தும் கொல்லப்படுவதாகவும், யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் தவிர ஏனைய சகல அரசியல் கட்சிகளும் நிராயுதபாணிகளாக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்சி உறுப்பினர்கள் கொல்லப்படுவது மனிதாபிமானமற்றது எனவும் சனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகுமெனவும் சனாதிபதியின் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்புப் பகுதியில் இடம்பெறும் கொலைகளுக்கான பொறுப்பு அரசாங்கத்திற்குரியதொன்றில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஏ-9...

நீடிக்கப்படவுள்ளதாக அறிவித்திருந்தார்.இதனிடையே இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகமும் போக்குவரத்து நேரம் நீடிக்கப்படுவதை கருத்தில் கொண்டு முகமாலை மற்றும் பளைப் பகுதிகளுக்கான 24 மணி நேர மின்சார வசதியை தாம் ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிவித்திருந்தது.

இந் நிலையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமிடையேயுள்ள முகமாலை சூனியப் பிரதேசத்தில் கடமையாற்றிவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்களும் தமக்கு இதுவரை நேர நீடிப்பு தொடர்பான எந்தவொரு தகவலும் கிட்டியிருக்கவில்லையென நேற்று அறிவித்துள்ளன. (27)

### அத்து...

நஷ்டங்களுக்கும் உட்பட்டுள்ளோம். பல அதிகாரிகளிடம் இது சம்பந்தமாக நேரில் கூறியபோதிலும் சரியான முடிவு கிடைக்கவில்லை. எனவே அமைதியான முறையில் இந்த உண்ணா விரதத்தை ஆரம்பிக்கவுள் ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

### இளைஞர்...

சேனைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவர் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பலுடன் தொடர்புடையவராக இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (32)

### கைக்குண்டு...

சென்றுவிட்டார். எனினும் இத்தாக்குதலில் சேத மெதுவும் ஏற்படவில்லை எனவும், இது தொடர்பான விசாரணைகள் வாழைச்சேனைப் பொலிசாரால் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

### அமெரி...

இச்சந்திப்பின் போது தேங்கி[க்] கிடக்கும் சமாதானம் பற்றியும், சந்திரிகாவின் பொய்ப்பிரசாரங் கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சூ)

### துப்பாக்கிப்...

யாழ். பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞனை எதிர்வரும் 8ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவினை நீதவான் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் த்லைமைக்கும், பொலிஸ்மா அதிபரிற்குமிடையே இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக உயர் மட்ட பேச்சுக்களிற்கு ஏற்பாடாகியுள்ளதாக தெரிய வருகின்றது. கொழும்பில் இடம்பெறவுள்ள இச்சந்திப்புத் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர். பி. றுவன் சந்திரசேகர கொழும்பிற்கு நேற்று அழைக்கப் பட்டுள்ளார்.

முன்னதாக சட்டத் தரணியொருவர் சகிதம் நேற்று முன் தினம் மீண்டும் யாழ். பொலிஸ் நிலையத்திற்குச் சென்றிருந்த றுவன் சந்திரசேகர மற்றும் பெரோஸ் ஆகியோர் சம்பவம் தொடர்பான முறைப்பாடொன்றினைச் செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த இளைஞன் மீது யாழ். நீதிமன்றில் நிலுவையிலுள்ளதாகக் கூறப்படும் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் நேற்று நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் ஆரம்பமாகியுள்ளது.

எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளை தாக்கிய பொலிசார் மீது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாத விடத்து பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்க மனித உரிமை ஆணைக்குழுவின் பணியாளர்கள் முற்பட்டுள்ளனர். (27)

### நோர்வேயின்....

மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தவுமே இந்த கையெழுத்து வேட்டை ஒரு வாரகாலத்திற்கு பெரும் முன்னெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.ஹெல உறுமயவின் பிரதித் தலைவர் வண.ஓமல்பே சோபித தேரர் உரையாற்றுகையில், கொழும்பு, கண்டி, கம்பஹா, காலி, மாத்தறை, பொலநறுவை உட்பட நாட்டின் பல முக்கிய நகரங்களில் தான் நேரடியாக இக் கையெழுத்து வேட்டையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், சிறிலங்காவின் உண்மையான எதிரிகள் நோர்வேத் தூதுவர்களே. விடுதலைப் புலிகளின் மேல் அனுதாபம் காட்டும் நோர்வே நாட்டவர்கள் சிறிலங்காவிலிருந்து கலைக்கப்பட வேண்டியவர்கள் என்றும் கோசமிட்டார். அஸ்கிரிய பீடத்தின் பிரதான உறுப்பினரான வண.பண்டித மடகம தம்மானந்த தேரர் உரையாற்றுகையில், சனாதிபதி சந்திரிகா சிறிலங்காவை இரண்டாகப் பிளவுபடுத்தக்கூடிய முயற்சியில் இறங்கவேண்டாமென அழுத்தம் கொடுக்கவே இக்கையெழுத்து வேட்டை நடைபெறவுள்ளதாகத் தெரிவித்தார். ஹெல உறுமயவின் கண்டி பாராளுமன்ற உறுப்பினர் வண.உடுவத்த நந்த தேரர் பேசுகையில், நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வேயின் உதவி தேவையற்றது என்றும், அப்படி வெளிநாட்டின் உதவி தேவைப்பட்டால், இந்தியாவின் உதவியைப் பெறுவது மட்டுமே சரியானது என்றும் கூறினார். 5 மில்லியன் கையெழுத்துக்களைப் பெறுவதற்குத் தீர்மானித்துள்ள ஹெல உறுமயவினர், அதன் பிரதிகளை சனாதிபதி, பிரதமர், அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், சிறிலங்கா இனப்பிரச்சினை விடயங்களில் தலையிடும் பிரதான நாடுகளின் தலைவர்கள் மற்றும் இது தொடர்பான அனைவருக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் உறுதி கூறினர். இந்தக்கையெழுத்துவேட்டையில், ஆளும் ஐ.ம.சு.மு. கட்சியின் அனைத்து உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் கையெழுத்துக்களும் இடம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமெனவும் வண.ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். (32)

### கப்பலில்...

டுள்ளன. இதேவேளை கப்பலில் ஏற்பட்ட வெடிவிபத்து தொடர்பான காரணங்கள் எவையும இது வரை அறிவிக்கப்படவில்லை. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.